பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 10 வெள்ளிக்கிழமை (26-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:243

## யுத்தநிறுத்த காலத்தில் தரையில் முதல் மோதல் சம்பவம்

# புலிகள் பிரதேசத்துக்குள் சிப்பாய் ஒருவர் ஊடுருவிப் பெண் போராளிகள் மீது சூடு!

## இருவர் காயம்; சுட்டவர் பதில் தாக்குதலில் பலி!!

கொழும்பு,ஜூலை26

முகமாலையில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் படையினரின் முன்னணிக் காவலரண்களை விட்டு முன்னேறி விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவியதாகக் கூறப்படும் படைச் சிப்பாய் ஒருவர், புலிகளின் பிரதேசத்தில் காணப்பட்ட பெண் போராளிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். அதில் இரண்டு பெண் போராளிகள் காயமடைந்தனர். புலிகள் திருப்பிச் சுட்டதில் அந்தச் சிப்பாய் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இராணுவ உயரதிகாரிகளுக்கும் முன்னணிக் காவலரண்களில் இருந்த ஏனைய படையினருக்கும் தெரியாமல் சம்பந்தப்பட்ட சிப்பாய் தன்பாட்டில் புலிகளின் பகுதிக்குள் சென்று இப்படி நடந்து கொண்டதாக இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த அசம்பாவிதம் குறித்து கண்காணிப்புக் குழு ஊடாக புலிகளுக்கு தகவல் தெரிவித்து நிலைமையைச் சீரடைய வைத்திருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதில் சம்பந்தப்பட்ட சிப்பாயின் உடலில் ஐந்து சன்னங்கள் பாய்ந்திருக்கின்றன.

சிப்பாயின் சடலத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக தங்களிடம் ஒப்படைக்க புலிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சிப்பாய் மனப்பாதிப்புக்கு அல்லது மதுபோதை எதற்கும் உள்ளாகியிருந்தாரா என்பதை கண்டு

(16 ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி புஷ் முழு அங்கீகாரம்!

## நேரடிச் சந்திப்பில் இலங்கைப் பிரதமரின் தலைமைத்துவத் திறனுக்கு புகழாரம்

வாஷிங்டன்,ஜூலை26

**இலங்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ் முழு அங்கீகாரம் வழங்கியிருக்கிறார். பிரதமர் ரணில் காட்டிய துணிவைப் பாராட்டிய ஜனாதிபதி புஷ், ரணிலின் தலைமைத்துவத்தில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் மீது நம்பிக்கையும் தெரிவித்தார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் வெள்ளை மாளிகையில் உற்சாகத்துடன் வரவேற்றுப் பேச்சு நடத்திய பொழுதே ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இந்த அங்கீகாரத்தை வழங்கியதோடு நம்பிக்கையையும் வெளியிட்டார்.

இலங்கையின் பொருளாதார அபிவி

(2ஆம் பக்கம் பார்க்க)

## தனித் தமிழ் ஈழம் அமைப்பதில் புலிகள் உறுதியாக உள்ளனர்

### விமல் வீரவன்ஸ எம்.பி.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு புலிகள் உறுதியான தனித் தமிழீழம் ஒன்றை உருவாக்குவதற்காகத் தீவிரமாக செயற்படுகின்றனர். ஆனால், அரசும் அதை கண்டும் காணாமல் இருக்கின்றது. இது நாட்டின் இறைமைக்கும், ஒற்றுமைப்பாட்டிற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ்சுமத்தினார்.

வழமையான கேள்வி நேரத்தின் பின் சபாநாயகரின் அனுமதியுடன் விமல் வீரவன்ஸ எம்.பி. விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

ரணில் அரசாங்கம் புலிகளுடன்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### களுத்துறைக் கைதிகளைத் தொடர்ந்து

## உண்ணாவிரதப் போராட்டத்தை மட்டு கைதிகளும் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு,ஜூலை26

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் நேற்று தமது உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்தினர். அமைச்சர் பெசந்திரசேகரன் நேற்று முற்பகல் மட்டக்களப்புக்கு வருகை தந்து சிறைக்கைதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியதை அடுத்தே போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.

பிரதமர் நாடு திரும்பியதும் அவருடன் பேச்சு நடத்தி இரண்டு வாரங்களுக்குள் உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் உண்ணாவிரதிகளிடம் உறுதிமொழி வழங்கினார். அமைச்சருடன் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ஞா.கிருஷ்ணபிள்ளை, மேலதிக அரச அதிபர் வே. சண்முகம் ஆகியோரும் சிறைச்சாலைக்குச் சென்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமைமுதல் 29 அரசியல் கைதிகள் தமது விடுதலையைக் கோரியே அங்கு உண்ணாவிரதம் இருந்துவந்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக

# பழ.நெடுமாறன், திருமாவளவன் இருவரையும் கைது செய்ய முஸ்தீபு!

சென்னை,ஜூலை26

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், விடுதலைச் சிறுத்தைகள் அணியின் தலைவர் இரா.திருமாவளவன் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோரைக் கைதுசெய்வது குறித்து தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்:-

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் சென்னையில் இடம்பெற்ற உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உரையாற்றியமைக்காக பழ. நெடுமாறன், திருமாவளவன் ஆகியோர் மீதும் -

தமிழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் எனக் கோரியதற்காக டாக்டர் ராமதாஸ் மீதும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக ஜெயலலிதா தெரிவித்தார். (ஐ-9)

### தீவக தாக்குதல் சம்பவம்

## விசேட குழுவின் விசாரணை முடிவு அடுத்த வாரம் அறிக்கை கையளிப்பு

கொழும்பு,ஜூலை26

தீவுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசேட ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த வாரம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எயார் மார்ஷல் ஹரி குணதிலக்க தலைமையிலான இக்குழு தனது அறிக்கையைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கவிருக்கின்றது.

கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் 16ஆம் திகதிமுதல் 19 ஆம் திகதி வரை தீவுப்பகுதியிலும் இக்குழு விசாரணைகளை மேற்கொண்டது.

பின்னர் கடந்த 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை, கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் குழு விசாரணைகளைத் தொடரவிருந்தது. ஆனால் சாட்சிகள் எவரும் வராததால் அங்கு விசாரணை நடைபெறவில்லை. இதையடுத்து இக்குழுவின் விசாரணை பூர்த்தியடைந்திருக்கின்றது. (ஐ)

### காசி ஆனந்தனின் தாயார் மரணம்

புரட்சிக் கவிஞன் காசி ஆனந்தனின் தாயாருக்கு விடுதலைப் புலிகள் 'நாட்டுப்பற்றாளர்' என்ற பட்டம் சூட்டி கௌரவம் வழங்கியிருக்கிறார்கள்.

காசி ஆனந்தனின் தாயார் காத்தமுத்து அழகம்மா நேற்றுமுன்தினம் காலமானார்.

நேற்று மட்டக்களப்பிலுள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. அங்கு விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் துறை, அன்னாருக்கு இந்தக் கௌரவப்பட்டத்தை வழங்கியது.

நேற்று இடம்பெற்ற அழகம்மாவின் மரணவீட்டில் அமைச்சர் பெ.சந்திரசேகரன் உட்படப் பல எம்.பிக்களும் கலந்துகொண்டனர். (ஐ-9)

## தென்மராட்சியில் இன்று மாணவர்களின் பேரணி

யாழ்ப்பாணம்,ஜூலை26

கல்விக்கான அடிப்படை உரிமைகளை மறுக்கும் வகையில் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை கண்டித்து தென்மராட்சியில் கண்டனப்பேரணி ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கோட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் பேரணி இன்று காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முடிவடையும்.

இந்தப் பேரணி தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதிக்கு முன்பாக அனைத்து பாடசாலைகளிலிருந்தும் இராணுவம் வெளியேற வேண்டும். அவ்வாறு இல்லையெனில் இயல்பு நிலையை மீளக்கொண்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு மறுக்கின்றது என்பதே பொருளாகும்.

சில பாடசாலைக் கட்டடங்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் அப்பாடசாலைகளுக்கு அருகில் உள்ள காணிகளில், கட்டடங்களில் முகாம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு

## 14 வயது பாடசாலை அணிகளின் கால்பந்து இறுதிச் சுற்று

யாழ்ப்பாணம்,ஜூலை26

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 14 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதிச் சுற்று ஆட்டங்கள் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பாமாகின்றன.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின ஏற்பாட்டில் இடம்பெறும இந்த இறுதிச் சுற்று ஆட்டங்கள் ஞாயிறுக்கிழமை வரை தொடர்ந்து இடம்பெறும்.

யாழ்பல்கலைக்கழகம், யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி, பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம், துரையப்பா ஸ்ரேடியம் ஆகிய நான்கு இடங்களிலும் காலை, மாலை என நான்கு ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. காலை ஆட்டங்கள் முற்பகல் 9.30 மணிக்கும் மாலை ஆட்டங்கள் மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

**யாழ். பல்கலை மைதானம்**

✱ காலை 9.30 மணி - திருமலை சென்.ஜோசப் கல்லூரி எதிர் மன்னார் சென்.சேவியர்ஸ் கல்லூரி.

✱ வடமராட்சி தேவரையாளி இந்துக்கல்லூரி எதிர் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி.

✱ மாலை 4.30 மணி - மன்னார் சென்.சேவியர்ஸ் கல்லூரி எதிர் வடமராட்சி தேவரையாளி இந்துக்கல்லூரி.

✱ திருமலை சென்.ஜோசப் கல்லூரி எதிர் யாழ்சென்ஜோன்ஸ் கல்லூரி.

**சென்.ஜோன்ஸ் மைதானம்**

✱ காலை 9.30மணி - மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரி எதிர் கிளிநொச்சி உதயபுரம் ம.வி.

✱ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் அம்பாறை சம்மாந்துறை ம.வி.

✱ மாலை 4.30 மணி - கிளிநொச்சி உதயபுரம் ம.வி. எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

✱ மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரி எதிர் அம்பாறை சம்மாந்துறை ம.வி.

**பாசையூர் சென்.அன்ரனீஸ் மைதானம்**

✱ காலை 9.30 மணி - திருமலை புனித வளனார் ம.வி. எதிர் மன்னார் சென்.லூசியஸ் கல்லூரி.

✱ அல்வாய் வடக்கு ஆர்.சி.ரி.எம். பாடசாலை எதிர் யாழ்.சென்.ஜேம்ஸ் ம.வி.

✱ மாலை 4.30 மணி - மன்னார் சென்.லூசியர்ஸ் கல்லூரி எதிர் அல்வாய் வடக்கு ஆர்.சி.ரி.எம். பாடசாலை.

✱ திருமலை புனித வளனார் ம.வி. எதிர் யாழ்.சென்.ஜேம்ஸ் ம.வி.

**துரையப்பா ஸ்ரேடியம்**

✱ காலை 9.30 மணி - மட்டக்களப்பு இக்னேசியஸ் கல்லூரி எதிர் கிளிநொச்சி வட்டக்கச்சி ம.வி.

✱ அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் அம்பாறை சம்மாந்துறை மத்திய கல்லூரி.

✱ மாலை 4.30 மணி - மட்டக்களப்பு இக்னேசியஸ் கல்லூரி எதிர் அருணோதயக் கல்லூரி.

✱ கிளிநொச்சி வட்டக்கச்சி ம.வி. எதிர் அம்பாறை சம்மாந்துறை மத்திய கல்லூரி. (ஐ-3-86)

### கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை26

ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கிடையில் யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 'பி' அணியும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் பங்குபற்றுகின்றன. (ஐ-3)

### சதுரங்க பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ்.ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ்.இந்துக்கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்தும் பாடசாலை தனிநபர் அணிகளுக்கிடையிலான வருடாந்த சதுரங்கச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடகடல் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் ச.குகராஜன் பங்குபற்றுவார். திருமதி உஷா குகராஜன் பரிசில்களை வழங்குவார். (ஐ-3)



இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தின் போது இங்கிலாந்து வீரர் மார்க் பவுச்சர் துடுப்பெடுத்தாடும் காட்சி.

## ஐந்து விக்கெட் சாதனையை 50 தடவை நிகழ்த்த முரளி திட்டம்



டெஸ்ட் இன்னிங்ஸ்களில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தும் சாதனையை 50 தடவை நிகழ்த்த விரும்புகிறேன். இவ்வாறு இலங்கையின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரு இன்னிங்ஸ்களிலும் தலா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார் முரளி. இதன் மூலம் இதுவரை 36 தடவை 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி, நியூஸிலாந்து வீரர் ரிச்சட் ஹட்லியின் சாதனையை சமப்படுத்தியுள்ளார் முரளி.

ஹட்லி 86 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி இச்சாதனையைப் புரிந்தார். எனினும் முரளி 76 போட்டிகளிலேயே இச்சாதனையைப் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"5 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான விக்கெட்டுக்களை வீழ்த்தும் சாதனையை 50 தடவை நிகழ்த்த விரும்புகின்றேன். இன்னும் 4 அல்லது 5 வருடங்கள் விளையாடினால் இந்த இலக்கை எட்ட முடியும் என நம்புகிறேன்." இவ்வாறு முரளி கூறியுள்ளார்.

30 வயதான முரளி டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 430 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாவீரர் இல்ல புனரமைப்புக்கு மக்களை உதவக் கோரிக்கை

## வங்கிக் கணக்குகளுக்கு பணம் செலுத்த வசதி

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ்.மாவட்டத்தில் சிதைத்துச் சீரழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களைப் புனரமைக்க மக்களின் பங்களிப்பை மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக் குழு கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் குழு செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்தது. அதில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிதைத்துச் சீரழிக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணி சிறப்புடன் முன்னெடுக்கப்படுவதற்கு ஒத்துழைத்து நிதி உதவி வழங்க விரும்பும் ஒவ்வொருவரும் தங்களாலான பங்களிப்பைச செய்யலாம்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் இயங்கும் பணிமனைகளிலோ அல்லது அவற்றுக்கான வங்கிக் கணக்கு இலக்கத்திலோ தங்களால் இயன்ற - விரும்பிய - தொகையை வழங்கி உதவுங்கள்.

வடமராட்சி மாவீரர் இல்லத்துக்கு கணக்கு இலக்கம் "2463 - மக்கள் வங்கி நெல்லியடி' என்ற வங்கிக் கணக்குக்கும் -

கோப்பாய் மாவீரர் இல்லத்துக்கு கணக்கு இலக்கம் '15421 - மக்கள் வங்கி, காங்கேசன்துறை' என்ற கணக்குக்கும் -

கொடிகாமம் மாவீரர் இல்லத்துக்கு கணக்கு இலக்கம் '20018 - மக்கள் வங்கி, சாவகச்சேரி' என்ற கணக்குக்கும் - நிதியை வைப்பிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

### கண்டனக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை26

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றம் கழகத் தலைவர் வைகோ கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் கண்டனக் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக கூட்டத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள் கலந்துகொள்வர்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பட்டப்பின்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ்.மாவட்ட செயலர் க.குமாரசாமி ஆகியோர் உட்பட பலர் உரையாற்றுவர். (ஐ-3)

### 'டெங்கு' காய்ச்சலுடன் இருவர் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை26

'டெங்கு' காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலதிக பரிசோதனைக்காக இவர்களது இரத்த மாதிரி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் வரணி, கழிபுரம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (ஐ-139)

### இலவச தையல் பயிற்சி

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் இலவச தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் யுவதிகள் இன்று காலை 9.00 மணிக்கு கிராம அலுவலரின் அத்தாட்சிப்படிவத்துடன் சமுகளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

### இரு பொலீஸார் சாட்சியம்

கடந்த வருடம் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நாரந்தனையில் வைத்துத் தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று யாழ்நீதிமன்றில் இடம்பெற்ற போது ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலீஸார் சாட்சியமளித்தனர்.

சம்பவம் நடைபெற்ற அன்று விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸ் ஒருவரும் வேலணைப் பிரதேசசபைத் தலைவர் கைது செய்யப்படுவதற்கு முன்பு விசாரணைகளை மேற்கொண்டு அவரைக் கைது செய்த பொலீஸ் ஒருவருமே நேற்றுச் சாட்சியமளித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய சில சான்றுகளையும் மன்றில் சமர்ப்பித்தனர்.

இதனை அடுத்து எதிர்வரும் ஒகஸ்ட் 27 ஆம் திகதிக்கு வளக்கு விசாரணையை நீதிவான் ஒத்திவைத்தார். (ஐ-10)

## வைகோ கைதானதை கண்டிக்கிறது சமாசம்

யாழ்ப்பாணம்,ஜூலை26

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ கைதானதைக் கண்டித்து யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

சமாசத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் விடுத்த அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழத் தமிழ் மக்கள் இன்னலுற்றபோதெல்லாம் துணிச்சலுடன் அவர்களுக்காகத் தொடர்ச்சியாக குரல் கொடுத்த தமிழக அரசியல் தலைவர்களில் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ முதன்மையானவர்.

அதுமட்டுமன்றி எமது விடுதலைப் போராட்டத்தை தீவிரமாக ஆதரித்து உலகறியப் பேசி வருபவர்களில் முதன்மையானவரும் இவர்தான்.

ஈழத் தமிழர்களாகிய எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கவேண்டிய தமிழக அரசு, வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட 'பொடா' என்கின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வைகோ அவர்களை கைது செய்து, சிறையில் அடைத்து வைத்திருக்கும் செயலானது வருந்தத்தக்கதும் வன்மையாக கண்டிக்கத்தக்கதுமாகும்.

ஈழத்தமிழர் விடிவுக்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, ஆதரவாகவும் குரல் கொடுப்பதில் இருந்து இம்மியளவும் விலக மாட்டேன் என கைது செய்யப்பட்ட பின்புகூட கூறிய தலைவர் வைகோ ஆவார்.

'பொடா' சட்டம் வைகோவின் கைது விடயத்தில் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இந்திய ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியினரே தெளிவாகக் கூறிவிட்ட பின்பும் அவரை சிறையில் அடைத்து வைத்திருப்பது மிகவும அநீதியானது.

ஈழத் தமிழருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமது வாழ்நாள் பூராகவும் ஆதரவாக இருந்தவா மறைந்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவரால் உருவாக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. கட்சியும், அதன் அரசும் அவரது வழிவந்த தலைவியாக கூறப்படும் தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இப்படி நடந்து கொள்வது மிகவும் கண்டனத்துக்குரியது.

இந்திய தேசியவாதி எனக் காட்டிக் கொள்ள மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர் இப்படியான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

வை.கோவை விடுதலை செய்ய வேண்டும் என உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் விடுக்கும் கோரிக்கையை ஏற்று தமிழக அரசு அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி கோருகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## இன்றைய ஆடிவேல் பவனிக்கு வர்த்தகர்கள் முழு ஆதரவு

யாழ்.நகரில் இன்று நடைபெறும் ஆடிவேல் விழா பவனிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.வணிகர் கழகம் வர்த்தகர்களைக் கேட்டிருக்கிறது.

இரதபவனி இன்று காலை ஆரம்பமாகி நண்பகல் 1.00 மணிக்கு யாழ். நகரை வலம் வருமென தேவஸ்தானத்தினர் அறியத் தந்திருக்கின்றனர். ஆடிவேல் சிறப்பாக - பக்திபூர்வமாக - நடைபெற யாழ்.வணிகர்களின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றனர். ஆகவே ஆடிவேல் சிறப்பாக நடைபெறுவதற்கு யாழ் வர்த்தகப் பெருமக்கள் முதன்மை தருவதுடன் கலாசார ஒழுங்கிற்கிணங்க வீதியை மகரதோரணங்களால் அலங்கரித்து, பூரண கும்பம் வைத்து, ஸ்ரீபால கதிர்காம முருகனை வரவேற்று இறையருள் பெற்று இன்புறுமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம் - என்று வணிகர் கழகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

## ரணிலின் சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருத்திக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் ஜனாதிபதி புஷ் தெரிவித்தார். தான் சந்தித்த வேறு ஒரு தலைவரிடமும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டது கிடையாது என்றும் ஜனாதிபதி புஷ் இச்சந்திப்பின் போது கூறினார்.

தமது நடவடிக்கைகளை முழு மனதுடனும் ஏற்று அதற்கான முழு அங்கீகாரத்தையும் வழங்கியமை இலங்கைக்குப் பலத்தையும் உற்சாகத்தையும் வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதமர் ரணில் எதிர்காலத்தில் இலங்கையின் செயற்பாடுகளுக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாகவும் சொன்னார்.

எதிர்காலத்தில் வெளிநாட்டு உதவிகள் சம்பந்தமாக அமெரிக்கா கடைபிடிக்கும் புதிய செயற்திட்டங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது. புதிய திட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகள் 'மிலேனியம் செலேஞ்' எனும் கணக்கின் மூலம் வழங்கப்படும் திறந்த வெளிப்படையான ஒரு திட்டத்தின் மூலம் உதவி பெறும் நாடுகள் தெரிவு செய்யப்படும்.

சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக அமெரிக்கா கடைப்பிடிக்கும் செயற்றிட்டங்கள் பற்றியும் அமெரிக்க ஜனாதிபதி இங்கு விளக்கமளித்தார். ஜனநாயகம், சுதந்திரமான ஓர் உலகை கட்டியெழுப்புவதற்கு தாம் உறுதியாய செயற்படுவதாகவும், இவ்வாறான ஒரு எதிர்காலத்தை நாளைய சமூகத்தினருக்கு வழங்குவதே தமது ஒரே அபிலாசையாகும் எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபருடன் நடந்த இச்சந்திப்பிற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொரகொட பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் திஹால் ரொட்ரிகோ ஆகியோரும் சமுகமளித்தனர்.

**ரணில் கருத்து**

இலங்கையில் சமாதான நடைமுறைகள் குறித்து முக்கியமாக ஆராய நாம் இங்கு வந்தோம். அதற்கு எனக்குத் தேவையான எல்லா ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டேன் என்று ஜனாதிபதி புஷ்ஷுடனான சந்திப்பை அடுத்து இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர்களிடம் கூறினார்.

வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறுகையில் செய்தியாளர்களிடம் பிரதமர் ரணில் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு எல்லா ஊக்கத்தையும் ஜனாதிபதி புஷ் வழங்கினார். எனக்கு அவர் வழங்கிய ஆதரவு ஒரு மிகப் பெரிய உதவியாகும்.

நான் உங்களின் பின்னால் என்று ஜனாதிபதி கூறும் பொழுது அது நிறையப் பொருள் கொண்டதாகும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் கூறினார். (ஐ-3-9)

குழந்தைகள் உட்பட 15பேரைக் கொன்றதற்காக

# உலகக் குற்றவியல் நீதிமன்றில் இஸ்ரேலை முன்னிறுத்த வேண்டும்!

## ஐ.நாவிடம் பலஸ்தீனர் கோரிக்கை

லண்டன்,ஜூலை26

**காஸாவில் குழந்தைகள் உட்பட 15பேரை விமானக் குண்டு வீச்சில் படுகொலைசெய்த இஸ்ரேலை உலக குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்தி தண்டிக்க வழிசெய்யவேண்டும். இவ்வாறு ஐ.நாவிடம் பலஸ்தீனர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

ஐநா.பாதுகாப்புச் சபையில் உரையாற்றிய பலஸ்தீனப் பிரதிநிதி நஸீர் அல் கிட்வா, புதிதாக நிறுவப்பட்டுள்ள உலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேல் விசாரிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

"நெதர்லாந்தின் ஹேக் நகரில் உலகக் குற்றவியல் நீதிமன்றம் இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் உலகில் இடம்பெறும் முதலாவது படுமோசமான யுத்தக்குற்றம் இதுவாகும்.

"ஐ.நா.பாதுகாப்புச் சபை யுத்தக் குற்றங்களை விசாரிப்பதற்காகவே இந்த நீதிமன்றத்தை அமைத்தது. ஆகவே, இஸ்ரேல் நடத்திய கொடூரமான இந்தப் படுகொலைகளுக்காக உலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேலை விசாரணைக்குட்படுத்த ஐநா.பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்."

- இவ்வாறு அல் கிட்வா தனது உரையில் குறிப்பிட்டார்.

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் தொடர்பாக விவாதிக்க அரபு நாடுகளின் அழைப்பின் பேரிலேயே ஐ.நா.பாதுகாப்புச் சபை கூட்டப்பட்டது. ஆயினும், பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது குறித்து உறுதியான தீர்மானம் எதுவும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. அதேசமயம், இஸ்ரேலின் தாக்குதலை கூட்டத்தில் கலந்துகொண்ட அரபு நாடுகள் மற்றும் மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இதற்கிடையில் -

"மேற்படி தாக்குதலின் முடிவு பற்றி முன்னரேயே தெரிந்திருந்தால் அத்தாக்குதல் திட்டத்தை செயற்படுத்தியிருக்க மாட்டோம்" என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு காஸா பகுதியில் ஹமாஸ் இயக்கத்தின் ஆயுதப்படைத் தலைவர் ஷேக் சலா ஷகாடா தங்கியிருந்த கட்டடத்தின்மீது ஒரு தொன் எடையுள்ள வெடிகுண்டை இஸ்ரேலிய எவ் - 16 ஜெட்விமானம் வீசியதும் - இதில் அந்தக் கட்டடத்தில் இருந்த ஷகாடா உட்பட 4பேரும், பக்கத்து வீடுகளில் வசித்த குழந்தைகள் உட்பட 11பேரும் கொல்லப்பட்டிருந்தனர். (ஒ)



இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் இறுதி ஊர்வலத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. சுமார் மூன்று லட்சம் பேர் கலந்துகொண்ட இந்த இறுதி ஊர்வலத்தில் 'பழிக்குப் பழி' என்ற கோஷம் மிக ஆக்ரோஷத்துடன் அனைவராலும் எழுப்பப்பட்டது.

## மேற்குக்கரை வன்முறை

மேற்குக் கரைப் பிரதேசத்தில் உள்ள யூதக் குடியிருப்பின் அருகில் நேற்றுக்காலை சென்றுகொண்டிருந்த கார் ஒன்றின் மீது பலஸ்தீனத் தீவிரவாதி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் அந்தக் காரில் பயணித்த இஸ்ரேலியர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

கடந்த 16 ஆம் திகதி பஸ் ஒன்றின்மீது தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு வெகு சமீபமாகவே நேற்றைய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. (ஒ)

## இந்திய ஜனாதிபதியாக கலாம் பதவியேற்றார்

புதுடில்லி,ஜூலை26



இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் நேற்றுக் காலை பதவியேற்றார். நாடாளுமன்றத்தில் நடந்த பதவியேற்பு விழாவில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி.என்.கிர்பால் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

பிரதமர் வாஜ்பாய், மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த 100 குழந்தைகள், கலாமின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் உட்படப் பலர் இவ் விழாவில் கலந்துகொண்டனர்.

கலாமின் சகோதரரான ஏ.பி.ஜெ. எம்.மரைக்காயர் (84 வயது) தமிழகத்திலிருந்து 40 மணிநேர நீண்ட பயணம் மேற்கொண்டு இவ்விழாவைக்காண வந்திருந்தார். (ஒ)

## இலங்கைப் படையைக் கண்டித்து தமிழக மீனவர் ஆர்ப்பாட்டம்!

சென்னை,ஜூலை26

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்தும் தாக்குதலைத் தடுத்து நிறுத்தக்கோரி அகில இந்திய மீனவர்கள் சங்கத்தினர் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

தமிழக மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினர் நடத்தும் தாக்குதலைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பது உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய மீனவர்கள் சங்கத்தினர் போராட்டம் நடத்தினர்.

சென்னையில் உள்ள சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் அகில இந்திய பொதுச்செயலாளர் டாக்டர் எம்.இராஜா தலைமை தாங்கினார். (ஒ)

## பாகிஸ்தானில் செயற்பட்ட பிரெஞ்ச் தூதரகம் மூடப்பட்டது

இஸ்லாமாபாத்,ஜூலை26

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள பிரெஞ்சு தூதரகம் மூடப்பட்டது. அங்கிருந்த அலுவலர்களை நாடு திரும்புமாறு பிரெஞ்சு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர், கராச்சியில் பிரெஞ்சு பொறியியலாளர்கள் சென்ற பஸ்ஸை தீவிரவாதிகள் குண்டுவைத்துத் தகர்த்தனர். இதில் பிரான்ஸைச் சேர்ந்த 11 பேர் உயிரிழந்தனர்.

இதேசமயம், பிரெஞ்சு தூதரகம் அமைந்துள்ள இடம் பாதுகாப்பற்ற இடமாக இருப்பதாக நிபுணர்கள் அறிக்கை சமர்ப்பித்தனர். இதையடுத்தே அந்தத் தூதரகத்தை மூட பிரான்ஸ் நாட்டு அரசு முடிவுசெய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்தத் தூதரகத்தில் விஸா வழங்கும் பணி காலவரையின்றி நிறுத்தப்பட்டுள்ளது. பிரான்ஸ் செல்வதற்கான விஸாக்கள் இஸ்லாமாபாத்திலுள்ள அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

கராச்சியில் சட்டம், ஒழுங்கு நிலை சீரான பிறகு, பாதுகாப்பான வேறோர் இடத்தில் தூதரகத்தை அமைக்கலாம் என்று பிரெஞ்சு பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர்.

கராச்சியில் அமெரிக்கத் தூதரகத்துக்கு வெளியே கடந்த மாதம் குண்டு வெடித்து 14 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# உலக நிதி அமைப்புகளில் பணக்கார நாடுகள் ஆதிக்கம்!

## ஐ.நா. அறிக்கையில் குற்றச்சாட்டு

பன்னாட்டு நிதியம் (ஐ.எம்.எப்.) உலக வங்கி நிதி நிறுவனங்களில் பணக்கார நாடுகளே ஆதிக்கம் செலுத்துகின்றன என்று ஐ.நா. அறிக்கை குறை கூறியுள்ளது.

அந்த நிதி நிறுவனங்களுக்கு ஏழை நாடுகளுடன் தொடர்பே இல்லாமல் போய்விட்டது எனச் சாடுகிறது அந்த அறிக்கை.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் வெளியிட்ட மனித மேம்பாட்டு அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, உலகளாவிய முடிவுகளைப் பணக்கார நாடுகளே எப்போதுமே எடுக்கின்றன. ஆனால், ஏழை நாடுகள்

உலக அரங்கில்

தங்களது மக்களை நேரடியாகப் பாதிக்கும் பிரச்சினைகளில் அதிகமாக ஈடுபடவேண்டியுள்ளது. வர்த்தகக் கட்டுப்பாடுகளிலோ விவசாயிகளுக்கான மானியங்களிலோ, சலுகைகளிலோ ஆபிரிக்காவில் எய்ட்ஸ் நோய் ஒழிப்புப் பிரசாரத்திலோ இந்த நிதி நிறுவனங்கள் போதிய அக்கறை செலுத்துவதில்லை.

சில சமயம் உலகமயமாக்கலுக்கு எதிராக ஏற்பட்டுள்ள தீவிர எதிர்ப்புகளையும், ஏழை, பணக்கார நாடுகளுக்கு இடையிலான இடைவெளியையும் பார்க்கும்போது, உலகம் சரியான பாதையில் செல்கிறதா? என்ற கேள்வி எழுகிறது - என்றுள்ளது.

உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றில் பெரும்பான்மை வாக்குப் பலம் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், பிரிட்டன், சவூதி அரேபியா, ரஷ்யா, ஜேர்மனி ஆகிய பணக்கார நாடுகளின் கைகளிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் குண்டு வெடிப்பு; பொலீஸார் உட்பட 7 பேர் காயம்!

ஸ்ரீநகர்,ஜூலை26

இந்தியாவின் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் அனந்தநாக் நகரின் பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. அதில் இரு பொலீஸார் உட்பட 7 பேர் காயமடைந்தனர்.

அமர்நாத் யாத்திரிகர்கள் பயணம் செய்த பஸ் அப்போதுதான் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது. அதனால், குண்டு வெடிப்பில் சிக்காமல் யாத்திரிகர்கள் உயிர் தப்பினர்.

பஸ் நிலையத்திலிருந்து அந்த பஸ் வெளியே சென்றுகொண்டிருந்த போது தீவிரவாதிகள் எறிகுண்டை பஸ் நிலையத்துக்குள் வீசினர். அக்குண்டு வெடித்து 5 அப்பாவிப் பொதுமக்களும் 2 பொலீஸாரும் காயமடைந்தனர். (ஒ)

## நேபாளத்தில் மழையால் 45பேர் உயிரிழந்தனர்!

காத்மண்டு,ஜூலை26

நேபாளத்தில் கடந்த 2 நாள்களாக வரலாறு காணாத அளவில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இருக்கிறது. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டு இருக்கிறது.

இதில் 45 பேர் உயிர் இழந்து விட்டார்கள். தலைநகர் காத்மண்டுவில் மட்டும் 13 பேர் பலியாகி இருக்கிறார்கள்.

அங்கு 177 மில்லிமீற்றர் அளவு மழை பெய்து இருக்கிறது. 1972ஆம் ஆண்டு பெய்த 102 மில்லிமீற்றர் மழையை இது மிஞ்சிவிட்டது.

இப்போது பெய்த மழையில் ஏராளமான மான்கள் மண் சரிவில் சிக்கிக்கொண்டன. பல காண்டா மிருகங்களும் இறந்துள்ளன.

தலைநகருக்கும், வெளியிடங்களுக்கும் இடையே எல்லாத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன. ஏராளமான வீடுகள், பாடசாலைகள், பாலங்கள் ஆகியவை மழை வெள்ளத்தில் சேதமடைந்துவிட்டன. (ஒ)

## அமெரிக்காவில் சமையலுக்கு மூட்டிய தீயால் 50 ஆயிரம் ஏக்கர் காடு நாசம்!

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஜூலை26

உலகின் மிகப் பழைமையான பாரிய மரங்கள் உள்ள அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில செம்மரக்காட்டை காட்டுத்தீயில் இருந்து காப்பாற்ற ஆயிரக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் இரவு பகலாகப் போராடி வருகிறார்கள்.

45 வயதான பெண்மணி ஒருவர் அப்பகுதிக்கு சுற்றுலா சென்ற போது சமைத்ததாகவும் -

அப்போது மூண்ட தீ காட்டுத்தீயாக உருமாறி இதுவரை 50ஆயிரம் ஏக்கர்கள் பரப்பளவிலான காட்டுப் பகுதியை எரித்து சாம்பராக்கியுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட பெண்மணி தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் காட்டுத் தீயால் இருநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர்.

வேகமாகப் பரவிவரும் இந்தக் காட்டுத்தீயின் சுவாலைகள் 10 மீற்றர்கள் அகலமும் 100 மீற்றர்கள் உயரமும் கொண்டுள்ளன. (ஒ)



அமெரிக்காவில் காட்டுத்தீ மூண்டுள்ள பகுதியைப் படத்தில் காணலாம்.

# பாடசாலைக் கீதம்

எங்கள் பிள்ளைகள் நன்றாகக் கல்வி கற்று, பரீட்சைகளில் சித்தியடைந்து, பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிகோலுபவை அரசாங்கப் பாடசாலைகள். அவற்றை அமைக்க, அவற்றிற்குத் தேவையான தளபாடங்களைப் பெற்றுக்கொடுக்க, ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க, பாட புத்தகங்கள் கொடுக்க, அணிவதற்கு சீருடைகள் வழங்க எங்கிருந்து பணம் கிடைக்கின்றது என்பதை நீங்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

நீங்களும் நானும் அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரிகளே இதற்கெல்லாம் கைகொடுத்து உதவுகின்றன. பாடசாலைகளின் பயனை மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பொது வசதிகளை நாம் அனுபவிப்பது வரிகளின் காரணமாகவே.

**நீங்கள் செலுத்தும் வரிகள் - நாட்டுக்கு விளக்கேற்றும் திரிகள்**



(C/23052)

**VAT**

உதயன்

## நாடாளுமன்ற ஜனநாயகம் தலைகுனிகின்றது

நாட்டின் அதியுயர் சட்டமாக்கும் சபை நாடாளுமன்றம். மிகவும் கௌரவத்துக்கும் கீர்த்திக்கும் உரிய ஸ்தானம் அதற்கு உண்டு.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட - கண்ணியம் மிக்க உறுப்பினர்களைக் கொண்ட - காலங்காலமாகப் பெருமைக்குரிய அரசியல் தலைவர்கள் அமர்ந்திருந்து அலங்கரித்த - நாடாளுமன்றில் மிகக் கேவலமான செயல்கள் அரங்கேறியிருக்கின்றன.

நாடாளுமன்றத்தில் கூச்சல், குழப்பம், அமளி துமளி ஏற்படுவது வழமைதான். ஜனநாயக நடைமுறையில் ஒரு பின்னடைவு இது என்ற கருத்தோடு அதற்கு ஓர் இடம்விட்டு நாம் வாளாவிருக்கலாம்.

ஆனால், அந்த எல்லைகளை எல்லாம் மீறி, நமது நாட்டின் சட்டத்தை ஆக்கும் அதிகாரம் கொண்ட உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தின் மையப் பகுதியில் ஒன்று கூடி, சண்டித்தனம் காட்டி, முஷ்டியை முறுக்கி, கைகலப்பில் ஈடுபட்டிருக்கின்றனர்; அடிபிடிப்பட்டிருக்கின்றனர்: சபையே அல்லோலகல்லோலமானது!

ஜனநாயக மரபுகள் பகிரங்கமாகக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த உயர்ந்த சபையின் நடவடிக்கைகளைப் பார்த்து, அதன் பெருமையை உணர்ந்து கொள்வதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்து, நாடாளுமன்ற கலரியில் கூடியிருந்த மாணவர்களை, அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேற்றும்படி நாடாளுமன்ற படைக்கல சேவிதர் தனது ஊழியர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார் - நாட்டு மக்களின் பிரதிநிதிகள் சபையின் நடுவே கட்டிப்புரண்டு மோதும் கேவலத்தை மாணவர்கள் பார்த்து இதுதான் நாடாளுமன்ற ஜனநாயகம் என்று தங்கள் மனதில் பதித்துக் கொள்ளாமல் தவிர்ப்பதற்காக.

நாட்டின் மிக உயர்ந்த பதவியான - முப்படைகளின் தளபதியான - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பொலனறுவையில் ஒரு கூட்டத்தில் ஆற்றிய உரையை இலத்திரனியல் ஊடகங்கள் திருப்பித்திருப்பி ஒளிபரப்புச் செய்தன. அவரது உரை, அதில் சில அமைச்சர்களைத் திட்டித் தீர்க்க அவர் பயன்படுத்திய சொற்கள், அமைச்சர் சிலரின் அங்கலட்சணத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அவர் காட்டிய முகபாவனை போன்றவற்றைப் பார்த்துப் படித்தவர்கள் அதிர்ந்து போனார்கள்.

நாட்டின் மிக உயர்ந்த கௌரவத்துக்குரிய பதவியில் இருக்கும் ஒருவரா, பொதுக் கருத்தரங்கில் - முன்னால் வீடியோ கமராக்கள் படம்பிடிக்க - தன்னிலை மறந்து இப்படி உரையாற்றுகின்றார் என்ற அதிர்ச்சி அவர்களுக்கு.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு எதிராக - அவரது செயற்பாடுகளுக்கு எதிராக - நீதிமன்றத்தில் வழக்குத்தொடர முடியாது என்ற சட்ட விலக்களிப்பு இருக்கின்றது. அதற்காக எத்தகைய கேவல நிலைக்கும் அவர் இறங்கிப் போவதா?

நல்ல ஜனாதிபதி, நல்ல நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று மனதுக்குள் வெந்துகொள்வது தவிர, மக்களுக்கு வேறு என்னதான் வழி?

தாங்கள் அரசியல் வங்குறோத்து நிலையை சகிக்கமுடியாத - ஏற்றுக்கொள்ள முடியாத - அரசியல்வாதிகள் ஜனநாயக மரபுகளை குழிதோண்டிப் புதைத்துவிட்டாவது - அதன்மூலமாவது ஆட்சி அதிகாரத்தையும் செல்வாக்கையும் தக்கவைத்துக்கொள்ள முயல்வது தவிர்க்கமுடியாதது. அதன் ஓர் அங்கமே இப்போது மேடையேறுகின்றது.

ஜனநாயக மாண்புகளை, மரபுகளை மதிக்கத் தெரியாத இந்த அரசியல்வாதிகளா ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்துக்கு ஜனநாயக வழியில் தீர்வைத் தரப்போகின்றார்கள் என்ற வினா தமிழர் தரப்பில் எழுவதும் நியாயமானதே.

'மயிலே, மயிலே இறகுபோடு' என்றால் மயில் இறகு போடவா போகின்றது? அதனால்தான் பிடுங்கி எடுக்க முயல்கின்றார்கள்.

ஜனநாயக மரபு, மாண்புகளைப் புரியாத இத்தகைய அரசியல்வாதிகளுக்கு அவர்களுக்குப் புரியும் மொழியில் பேசி, உணரவைக்க நமது இளைஞர்கள் தலைப்பட்டதும் இந்தக் காரணத்தால்தான்!

# கல்வி என்ற தமது பிறப்புரிமைக்காக தென்மராட்சி மாணவர்கள் நடத்தும் போராட்டம் வெற்றிபெற உதவுங்கள்!

## அதிபர்கள் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை26

கல்வி என்ற தமது பிறப்புரிமையை வலியுறுத்தி தென்மராட்சி மாணவர்கள் இன்று நடத்தும் பேரணி வெற்றிபெற தென்மராட்சி பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட அனைவரும் உதவுமாறு தென்மராட்சி அதிபர்கள் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் -

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வினால் தென்மராட்சி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து பெரும்பாலான தென்மராட்சிப் பாடசாலைகள் புதிய நம்பிக்கை, எதிர்பார்ப்புகளுடன் தமது சொந்த இடங்களில் பல்வேறு கஷ்டங்கள், இடர்கள் மத்தியில் இயங்கத் தொடங்கியுள்ளன.

இவ்வேளையில், புதிய உயர் பாதுகாப்பு வலயங்கள், புதிய இராணுவ முகாம்கள், காவலரண்கள் போன்றவற்றினால் மக்கள் மீளக் குடியமர்வதிலும், பாடசாலைகளை மீள ஒழுங்கமைப்பதிலும் பல பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. இவை மாணவர்களின் இயல்பான வாழ்க்கையிலும், கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக நாம் உணர்கின்றோம்.

இந்நிலையில், மாணவர்கள் கல்வி எனும் தமது பிறப்புரிமைக்காக அமைதியான, அஹிம்சை முறையில் இன்று பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதில் தென்மராட்சி அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பங்குகொண்டு நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

கல்விக்கான அடிப்படை உரிமைகளை மறுக்கும் வகையில் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை தென்மராட்சிக் கோட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் சார்பில் கண்டனப் பேரணி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## நஷ்டஈடு கோருகிறார் ரவி கருணாநாயக்க

### மங்கள, அநுராவிடமிருந்து

கொழும்பு,ஜூலை26

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க ஆகியோர் தனக்குத் தலா நூறு கோடி ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று கோரி அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது சட்டத்தரணி ஜி.ஜி. அருட்பிரகாசத்தின்மூலம் நட்டஈட்டுக் கோரிக்கைக் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

இவ்விருவரும் தனக்கு இரண்டு வாரங்களுக்குள் மேற்படி நஷ்டஈட்டுத் தொகையைச் செலுத்தாவிடில் அவர்களுக்கு எதிராக் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும், முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவும் தனது கௌரவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் பொதுமக்கள் மத்தியில் பேசியிருக்கிறார்கள் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (ஓ)

## மட்டக்களப்பு நகரில் பொருண்மிய கண்காட்சி

### ஒக்ரோபரில் இடம்பெறும்

மட்டக்களப்பு,ஜூலை26

மட்டக்களப்பில் பொருண்மிய மேம்பாட்டு பொருட் கண்காட்சி ஒன்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 11ஆம திகதி முதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

பொருண்மிய மேம்பாட்டு கண்காட்சி மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகிய இடங்களில் நடைபெறும். இக்கண்காட்சியில் மட்டக்களப்பு அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், வர்த்தக நிறுவனங்கள், ஆகியவற்றின் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

கண்காட்சியை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. இக்கூட்டம் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் நிசாம் தலைமையில் நடைபெற்றது. (ஓ)

## மாணவரை போராட்டத்தில் ஜே.வி.பி. ஈடுபடுத்தாதாம்

கொழும்பு,ஜூலை26

மாணவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தும் எண்ணம் எமக்கு இல்லை. நாம் அப்படி எந்தவொரு முயற்சியிலும் ஈடுபடவில்லை என்று ஜே.வி.பி. அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

ஜே.வி.பி. மாணவர்களைத் தூண்டி வீதிப் போராட்டங்களில் ஈடுபடுத்த முயற்சி செய்வதாகக் கல்வி அமைச்சு தெரிவித்திருக்கிறது.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க இது தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையில் மாணவர்களைப் பலிக்கடாவாக்கும் முயற்சிகளில் ஜே.வி.பி. இறங்கமாட்டாது. அரசியல் சுயலாபத்திற்காக ஐ.தே.க. எம்மீது குற்றஞ்சாட்டி வருகிறது எனக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

**நாளை**

ஆடி 11
சனிக்கிழமை
(27.07.2002)
திதி : திருதியை
மாலை 5.57 வரை.
நட்சத்திரம்: சதயம்
பின்னிரவு 1.14 வரை
மரணயோகம்
சுபநேரம் : 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

விரும்புவதை கேட்டுப் பெற முடியாததாலேயே பல வெற்றிகள் கைவிட்டுப் போகின்றன.

### யாழ்.மாவட்டத்தில்

## தொழிற்சாலைகள் அமைக்க தலைவர் பிரபாவுடன் பேச்சு!

### தொழிலதிபர்கள் நடத்தினராம்

தென்மராட்சி,ஜூலை26

யாழ்.மாவட்டத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்காக வெளிநாட்டில் வசிக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் அதிபர்கள் விடுதலைப்புலிகளின் தலைமையுடன் பேச்சு நடத்தியதாக விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மருந்து உற்பத்தித் தொழிற்சாலையும், தீவகம் சாட்டிப் பகுதியில் குளிர்பான தொழிற்சாலையும் அமைப்பதற்கு அந்தந்த தொழில் நிறுவனத்தினர் வன்னிக்கு வந்து பேச்சு நடத்திச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

### ஆவணங்களற்ற

## மோட்டார் வாகனப் பதிவு பிரதி வெள்ளிக்கிழமைகளில்!

யாழ்ப்பாணம்,ஜூலை26

ஆவணங்கள் இல்லாத மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்தல் மற்றும்ஆவணங்கள் தொலைந்த மோட்டார் வாகனங்களின் உடைமைமாற்றம் தொடர்பான விவரங்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் யாழ். செயலக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

வாகன உரிமையாளர்கள் மேற்படி விடயங்கள் தொடர்பான பொலீஸ் பதிவு அல்லது பிரதேச செயலரின் அங்கீகாரத்துடனான கிராம அலுவலரின் சான்றிதழ், சத்தியக் கடதாசி மற்றும் இரண்டு புகைப்படங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் யாழ்.செயலகத்தில் உள்ள அலுவலகத்திற்கு எடுத்துவரவேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை -

வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கும் மற்றும் பூர்த்திசெய்த படிவங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் எதிர்வரும் 12 ஆம்திகதி நடைபெறும் எனவும் -

ஏற்கனவே எழுத்துப் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்தவர்களுக்கான மீள் பரீட்சைக்கான திகதியை எதிர்வரும் 5 ஆம் திகதி உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறும் - அவர் கேட்டுள்ளார். (ஓ-10)

### அரசு அறிமுகப்படுத்தியுள்ள

## சீருடை வழங்கல் திட்டத்தால் பலருக்கும் அசௌகரியம்

மாவனல்ல,ஜூலை26

அடுத்தவருடம் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கு அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய நடைமுறை பெற்றோர், மாணவர்கள் என பலருக்கும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல பெற்றோர்களுக்கு விஷயமே புரியாதுள்ளது. பாடசலைகள்மூலம் அல்லது தனியார் புத்தக நிலையங்கள் மூலம் பெறப்படும் இதற்கெனவுள்ள இரண்டு விண்ணப்பப் படிவங்களை நிரப்பவேண்டும். மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பமிட்டு பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் பிரதேச செயலகத்திற்குக் கையளிக்கவேண்டியுள்ளது.

பெற்றோர்கள் பலர் இது விடயமாக பகுதிக் கிராமசேவகர்களைக் காண்பதற்கும், பிரதேச செயலகங்களுக்குச் செல்வதற்குமாக அலைக்கழிந்து வருகின்றனர். புதிய சீருடை விநியோக நடைமுறை பற்றி பல பின்தங்கிய பாடசாலைகளில் மாணவர்களுக்கோ, பெற்றோர்களுக்கோ சரியான வழிகாட்டல் எதுவும் இல்லை என்றும் பல பெற்றோர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (ஓ)

## யாழ்.அகதிகள் நிலைகண்டு சட்டத்தரணிகள் அதிர்ச்சி!

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை இடம்பெயர்ந்தோர் முகாமுக்குச் சென்ற தென்பகுதி சட்டத்தரணிகள் குழுவினர் அங்குள்ள மக்களின் இருப்பிட நிலைமை கண்டு பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியதாகக் கூறப்படுகிறது.

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறை, தையிட்டி, மயிலிட்டி போன்ற கரையோரப் பகுதி மக்கள் இம்முகாமில் பல வருடங்களாக இருந்து வருகின்றார்கள்.

இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள வீடுகள் மழை காலத்தில் ஒழுகக் கூடிய நிலையில் காணப்படுவதையிட்டே சட்டத்தரணிகள் அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இத்துடன் இம்முகாமில் உள்ளவர்களுக்கான அடிப்படை வசதிகளும் கூட மிகவும் குறைவாகவே காணப்படுவதாகவும் -

இம்முகாமில் உள்ளவர்களின் மேம்பாட்டிக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் - சட்டத்தரணிகள் குழுவினர் கூறியுள்ளனராம். (ஓ-86)

# ஆன்மீகத்தை உணராததாலேயே எமது வாழ்வு நரகமாகிவிட்டது!

## சிவதீட்சை நிகழ்வில் காயத்ரிசுவாமி உரை

"உலகில் வாழுகின்ற மனிதன் ஆன்மீகத்தை உணராத தன்மையால் அவனது இல்லற வாழ்வு நரக வாழ்க்கையாக மாறிவிட்டது. இந்த நிலையால் மனிதன் பல துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது."

மீசாலையில் உள்ள ஸ்ரீகாயத்திரி காமகோடி பீடத்தின் குரு ஸ்ரீராஜகுமார் சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார். சமீபத்தில் ஸ்ரீகாயத்திரி காமகோடி பீடத்தில் இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு சிவ தீட்சை வழங்கல் நிகழ்வில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:-

"இன்று எமக்குக் கொடிய நோய்கள் வருகின்றன. இரத்த அழுத்த வியாதி, புற்றுநோய், சலரோகம் என பல வியாதிகள். இவை மனிதனை ஆட்டிப்படைக்கின்றன. அக்காலத்தில் ஆன்மீக பலத்துடன் நூறு வயதுவரை வாழ்ந்தார்கள். இன்று எல்லாம் கலப்படமாக உள்ளது. அக்காலத்தில் கொடிய வியாதிகளை ஒழிக்க தமிழில் பதிகங்களை பண்ணுடன் பாடினார்கள். இதனால் பல கொடிய நோய்கள் தணிந்தன.

"இந்துசமய மக்கள் கண்டிப்பாக தீட்சை பெறல்வேண்டும். கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் தமது சமய முறைகளைக் கைக்கொள்வதுபோல நாம் எமது சமய ஒழுங்குகளை மீறி நடக்கக்கூடாது.

"இந்துமதம் மிகவும் பழைமையானது. எனவே நாம் அச்சமயத்துக்குட்பட்டு நீதியான முறையில் நியாயமாக வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் சமூகம் நல்வழியில் வாழும் நாம் சரியான பாதையில் செயற்படாவிட்டால் இறைவனிடமிருந்து தப்பிவிட முடியாது. இறைவனது பார்வை எம்மை நோக்கியுள்ளது. மனிதர்களாகிய நாம் கருவிகளாக உள்ளோம். இறைவன் எம்மை இயககுகிறார்.

"இன்று மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பதில்லை. குருவை மதிப்பதில்லை, எனவே ஞானிகள், மகான்களை வழிபடுங்கள் அப்போது கல்வியில் முன்னேற வழிபிறக்கும். இளமைக்காலம் கள்ளங்கபடமற்ற வயது. எனவே இக்காலத்தில் நல்ல பழக்கங்களைப் பழகவேண்டும்.

"நாளாந்தம் ஒவ்வொருவரும் வீடுகளில் பஜனை செய்யவேண்டும். அப்போது எமது வாழ்வு வளம் பெறும். அதுமட்டுமல்ல சுயநலமாக வாழாதீர்கள். மற்றவர்களுக்காக வாழுங்கள். அதனால் நாம் மேலும் வளம்பெறலாம்.

"எனவே சிவதீட்சை பெறுவது, வீட்டில் கோலமிடுவது தமிழ்மக்களது வாழ்வில் நிலைத்து நிற்கவேண்டும். அதன்படி வாழப்பழகவேண்டும்" - என்றார். (ஓ-31)

# பேச்சுக்கு முன் அரசு-புலிகள் இடையே நம்பிக்கையைக் கட்டி எழுப்பவேண்டும்

## வாஷிங்ரனில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

வாஷிங்ரன், ஜூலை26

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசுக்கும் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதையும் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியவுடனேயே சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க அவகாசம் ஏற்படும். இது இலகுவான ஒரு பயணம் அல்ல. இருப்பினும் முழு மனதுடனும் நிதானத்துடனும் பேச்சுக்களில் நாம் ஈடுபடுவோம்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வாஷிங்ரனில் இவ்வாறு கூறினார். வாஷிங்ரனில் உள்ள கல்விமான்களுக்கான வுட்ரோவில்சன் சர்வதேச கலையகத்தில் ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இவற்றைக் கூறினார்.

"பயங்கரவாதம், சமாதானத்தை அடைவதில் அது எதிர்நோக்கும் சவால்" என்ற கருப்பொருளில் பிரதமர் ரணில் உரையாற்றினார்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவானதற்கான காரணங்களை ஆரம்பத்தில் எடுத்து விளக்கிய அவர் கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க வழங்கிய ஆணைப்படி புதிய அரசு செயற்படுவதாகச் சொன்னார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து, சமாதானத்தை ஏற்படுத்துவது மிகவும் கடினமான இலக்காகும். இந்த இலக்கை நெருங்க முடியுமா என்பதே எம் முன்னால் உள்ள பெரும் கேள்வியாகும். எவ்வாறாயினும் அந்த இலக்கை நெருங்க முடியும் என்பதே எனது நம்பிக்கையாகும்.

பல காரணங்களின் அடிப்படையில் அந்த நம்பிக்கை என்னில் எழுந்துள்ளது.

சகல இலங்கையரையும் சமாதான நடைமுறைகளில் பங்காளியாக்குவது முதல் நடவடிக்கை. சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிமோ அல்லது வேறு இனத்தவர்களோ அவர்கள் அனைவரையும் இந்தத் தேசிய முயற்சிகளில் பங்காளியாக்குவது எமது குறிக்கோளாகும்.

எமது கடந்தகால அனுபவங்களைக் கொண்டு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவது இரண்டாவது நடவடிக்கையாகும்.

எமது இந்த முயற்சியை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்ல இருகட்சி ஆதரவு எமக்குத் தேவை என்பதை நாம் ஏற்றுக்கொள்வது மூன்றாவது நடவடிக்கையாகும்.

இவை அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்சென்றாலும் நிரந்தரமான சமாதானத்தை அடைய வேண்டுமானால் மற்றொரு விடயம் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். அது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை. இந்த நடவடிக்கையை நாம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டோம்.

இதேவேளை, சகல இன மக்களையும் ஐக்கியப்படுத்தி பலமடைவதே எமது குறிக்கோள். வடக்கையும் தெற்கையும் கிழக்கையும் மேற்கையும் ஐக்கியப்படுத்தும் திட்டத்தை எதிர்காலத்துக்காக தயாரித்திருக்கிறோம்.

நேற்று நடந்த பழைய அநீதிகள் நாளை நாம் கட்டியெழுப்ப உத்தேசித்துள்ள இலங்கைக்குச் சம்பந்தமற்றவையாகும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் கூறினார். (ஐ)

# இ.போ.சபை அதிகாரிகள் குழு கோண்டாவில் சாலைக்கு விஜயம்!

யாழ்ப்பாணம், ஜூலை26

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் தலைமையிலான 3பேர் அடங்கிய குழுவொன்று நேற்றுமுன்தினம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலைக்கு விஜயம்செய்தது.

கடந்த திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இக்குழுவினர், நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் கோண்டாவில் சாலைக்கு வருகைதந்தபோது தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, யாழ் சாலை முகாமையாளர் எஸ்.நல்லதம்பி தலைமையில் கூட்டமொன்றும் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் பி.எச்.எம்.ரட்ணஸ்ரீ உட்படப் பலர் உரையாற்றினர்.

இக்குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர்சாலை மற்றும் யாழ். மத்திய பஸ் நிலையம் ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தினர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இந்தக் குழுவினர் பருத்தித்துறை சாலைக்கு விஜயம் செய்தனர்.

பொது முகாமையாளர் தலைமையிலான இக்குழுவில் டி.சி.சேனதீர (பிரதம விநியோக உத்தியோகத்தர்), எஸ்.எவ்.சேவியர் (நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (எ-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இறை பணிக்காக அழைக்கப்பட்ட

அருட்செல்வி

ஜெயசீலி றொட்றிக்கோ

*(அதிபர், றோ.க.ம. கல்லூரி, நெடுந்தீவு)*

தனது துறவற அர்ப்பணிப்பு வாழ்வின் 25 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்தவேளையில் அவர்களை இறைவனின் பெயரால் வாழ்த்துகின்றோம்.

*நெடுந்தீவு.* திரு.திருமதி எட்வேட் குடும்பத்தினர். (C/23026)

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13 - 10 - 1969



அந்தியன் அழிவு
26 - 07 - 1989

### செல்வன் பரமகுரு ஸ்கந்தகுமார்

*(மாணவன்- யா/ஹாட்லிக் கல்லூரி, யா/நெல்லியடி ம.ம.வி.)*

எங்கள் அன்புச் செல்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனை
என்றும் பிரார்த்திக்கும்:

*"முத்துமாரிகை", பருத்தித்துறை.* பாசமிகு ஐயா, அம்மா, அக்கா, அத்தான், மருமகன் மற்றும் உறவினர், நண்பர்கள். (6211)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 - 04 - 1978



மறைவு
05 - 08 - 2001

### கணபதிப்பிள்ளை ஜீவகாந்தன்

(திதி:துதீயை)

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உன்
ஆருயிர் அன்பிற்கு ஈடாகுமோ - தேறுதல்
சொல்ல தெய்வம் வந்தென்ன ஜீவா - உன்
திருமுகம் பார்த்தால் போதாதோ - கம்
உள்ளங்கள் துடித்திட நீ எங்கு சென்றாய்?
எந்நாளும் உன் நினைவால் கண்ணீரால்
கரைகின்றோம் ஓர் ஆண்டல்ல பல்லாண்டு
சென்றிடினும் எம் நெஞ்சத்தில் உமது நினைவு என்றும் நீங்காது.

*ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.* உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர், உறவினர். (6136)


HERO CYCLES

சர்வதேசரீதியில் ISO சான்றிதழ் பெற்றதும் இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் பைசிக்கிளுமாகும்

எட்டு வருட காலம் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள ஒரே பைசிக்கிளாகும்

ஸ்டாண்ட், ஸ்போட்ஸ் பைசிக்கிள்களுக்கு கரியர் லொக், பெல், ஸ்டாண்ட் ஆகிய உதிரிபாகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஹீரோ பைசிக்கிள் வாங்குபவர்களுக்கு இலவசமாக சிங்கப்பூர் போய் வரவும், இருபதாயிரத்திற்கும் அதிகமான பரிசில்களை வெல்லக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளது





யாழ்ப்பாணத்தில்

| E.S.பேரம்பலம் & கம்பனி | வீ.வேங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் | ஈஸ்வரன் டிரேடர்ஸ் | பிள்ளையார் |
|---|---|---|---|
| 50,52, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | சைக்கிள் ஸ்ரோர்ஸ் சுன்னாகம் |

Sole Agents

HERO CYCLES

Faizal Hardware Stores
74, Dam Street, Colombo 12,
Phone : 433727,423273,384250-3

(C/22952)

# உடன்படிக்கை அமுலுக்கு வந்தபின் 203 தமிழ்க் கைதிகள் விடுதலை


புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின்னர் கடந்த நான்கு மாதங்களில் 203 தமிழ்க்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டம், விடுதலைப் புலிகள் மீதான தடைச்சட்டம் ஆகியவற்றின்கீழ் களுத்துறை, மட்டக்களப்பு, பூஸா, வெலிக்கடை, யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலைகளில் மொத்தம் 589பேர் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 203 பேர் கடந்த நான்கு மாதங்களில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் - இன்னமும் 386 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.(ஐ-3)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 27 - 03 - 1925



மறைவு 06 - 08 - 2001

### அமரர் சி.வைரவிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர் - சரசாலை)

திதி: ஆடி அபரத்துதியை (26-07-2002)

*அன்பும் பண்பும் நிறைய எம்மோடு அருகிருந்து*
*பக்குவமாய் அறிவுரை பல புகட்டி வளர்த்தீர்களே!*
*விண்ணகம் உங்களை அழைத்ததனால் அழுகின்றோம் அப்பா!*
*ஆண்டொன்று சென்றாலும் ஆறாது உங்கள் நினைவுகள்.*

*சரஸ்வதிப் பாடசாலை வீதி,*
*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.* (6313)

- குடும்பத்தினர்.


## அற்லஸ் கொமினிக்கேசன் பஸ் ஆசனப் பதிவகம்




77, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

*ஐந்துலாம்புச் சந்தி, கொழும்பு.*

யாழ்.- கொழும்பு, கொழும்பு - யாழ்.பிரயாணம் செய்ய குளிரூட்டப்பட்ட பெரிய சொகுசு பஸ் சேவை ஆரம்பமாகிவிட்டது. அத்துடன் தனியாகப் பயணம்செய்ய எமது நிறுவனத்தில் குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சிறிய வாடகை வாகனம் திருமணத்திற்கு, சுற்றுலாவிற்கு, கோவில் தரிசனம் செல்ல மற்றும் தேவைகளுக்கும் தொடர்புகொள்ளலாம்.

*தொ.பே.இல. 021 - 2990*

*எமது நிறுவனத்தின் சேவைகள்:*

1. தொலைபேசி: வெளிநாட்டு, உள்நாட்டு வசதி, பக்ஸ் வசதி.
2. தங்குமிட வசதி (சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படும்) யாழ்., கொழும்பில்.
3. உள்நாட்டு, வெளிநாட்டு பார்சல் விரைவாக அனுப்புதல்.
4. பயணிகள் நலன்கருதி பின்வரும் இடங்களில் பதிவுகள் செய்துகொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குகன் ஸ்ரோர்ஸ்.<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | யாழ். பஸ் நிலையம் முன்பாக,<br>398A, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| இந்திரன் கொமினிக்கேசன்.<br>கொடிகாமம். | கஜன் தொலைத் தொடர்பகம்.<br>திருநெல்வேலி. |
| தர்மகத்தா சபை காரியாலயம்.<br>ஆஞ்சநேயர் ஆலயம்.<br>மருதனார்மடம். | கல்யாணி பன்சி ஹவுஸ்<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |

*மு.கு:* சொகுசு பஸ் புறப்படும் நேரம்: யாழ்நகரில் இருந்து 6.30மணிக்கு புறப்பட்டு ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு (6.45மணி) சென்று கோப்பாய் வழியாக கைதடியால் செல்லும் என்பதனை அறியத்தருகின்றோம்.




தொடர்புகொள்ள:

**அற்லஸ் கொமினிக்கேசன்,**
**77, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.இல.: 2990, 2557.**

(6333)



## சைக்கிள் என்று கேட்காதீர்கள்

## லுமாலா என்று கேட்டு வாங்குங்கள்!

இலங்கையில் 20 வருடத்திற்கும் மேலாகஅனைவரது மனதிலும் தனக்கென்று ஒரு தனி இடத்தை பெற்றுக்கொண்ட ஒரே ஒரு சைக்கிள் லுமாலா.



அனைத்து உதிரிப்பாகங்களையும் எவ்வேளையிலும் இலங்கையின் எப்பாகத்திலும் தங்குதடையின்றி அனைவரும் பெற்றுக் கொள்ளலாம்.



பத்து வருடகால உறுதியான உத்திரவாதம் அளிக்கப்படும்.

ஜப்பானிய தொழில் நுட்பத்துடனான ஒரே ஒரு சைக்கிள்

10 YEARS WARRANTY

THE LUMALA CYCLE

Lumala

Bicycles supreme

CITY CYCLE INDUSTRIES


117 & 119 Dam Street, Colombo - 12

Tel : 432745, 433245 Fax : 449478

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2002
### மாதிரி வினாத்தாள் இல. - 6

### பகுதி 1


தரம் 5 நேரம்:- 45 நிமிடம்




01. படத்தில் காட்டப்பட்டுள்ள இயற்கைக் காட்சி எது எனத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.
(1) வீடும் மரமும் (2) சூரியோதயமும் சந்திரோதயமும்
(3) மாலைக்காட்சி (4) கடற்கரையும் மலைநாடும்
02. படத்தில் காணப்படும் உயிருள்ள பொருள்கள் இரண்டின் மீதும் "பச்சை" நிறம் தீட்டுக.
03. படத்தில் இயற்கை ஒளிமுதலின் நடுவே "S" என எழுதுக.
04. படத்திலே படகு ஆனது எந்த அம்புக்குறி காட்டும் திசையில் பயணம் செய்யும் என எழுதுக. ..........................................
05. கீழ்வருவனவற்றிலே படத்திலுள்ள இயற்கை வளங்களை மட்டும் இனங்கண்டு அடைப்புக்குள் '✓' என அடையாளமிடுக.
(1) நீர் (............) (3) படகு (............) (5) மலை (............)
(2) வீடு (............) (4) சூரியன் (............) (6) மரம் (............)

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


06. ஒரு சிறுமி இறப்பர் வளையத்தைக் கொண்டு ஆணி அடிக்கப்பட்ட பலகை ஒன்றில் கீழே காட்டியவாறு முக்கோணி ஒன்றை அமைத் தாள். அவள் பின்னர் P என்ற உச்சியை Zஇற்கு மாற்றினாள்.





Rஇலுள்ள கோணத்திற்கு என்ன நடந்தது?
(அ) சற்றுப் பெரிதானது.
(ஆ) இருமடங்கு பெரிதானது.
(இ) அது மாற்றமடையாமல் இருந்தது.
(ஈ) சற்றுச் சிறிதானது.
07. மேலுள்ள செயற்பாட்டின்போது Rஇல் அமையும் கோணம் யாது?
(அ) செங்கோணம்
(ஆ) செங்கோணத்திலும் குறைய
(இ) செங்கோணத்திலும் கூட
(ஈ) கூறமுடியாது.
08. பின்வரும் எப்பெயரின் எழுத்துக்கள் யாவும் நேர்கோடுகளால் ஆனவை?
(அ) ARJUNA (ஆ) RANI
(இ) SHIROMI (ஈ) NILANTHI
09. இது சதுரமுகி ஒன்றின் விரிந்த வடிவமாகும்.



பின்வரும் சதுரமுகிகளில் எது திண்மமாக்கிய சதுரமுகியின் ஒழுங்கமைப்பு அன்று?




10. ஒரு பாடசாலையில் எப்பொழுதும் இருப்பது?
(அ) ஆசிரியர் (ஆ) புத்தகம் (இ) மைதானம் (ஈ) வகுப்பறை
11. மனிதன் பிறந்த அன்றே அவனைப்பற்றி உறுதியாகக் கூறக் கூடியது.
(அ)மணம் முடிப்பது (ஆ) கல்வி கற்பது
(இ) இறப்பது (ஈ) தந்தையாவது
12. எந்தக் கடதாசித் துண்டு மடிப்பு விரிக்கப்படும்போது வடிவம்  ஐ மாத்திரம் காட்டும்?



(அ) (ஆ) (இ) (ஈ)

★ **கீழே தடித்த எழுத்திலுள்ள கூற்றுக்களை நாம் உண்மையென ஏற்றுக்கொண்டால், அவற்றை அடுத்துவரும் மூன்று கூற்றுக் களுள் ஒன்றும் உண்மையாயிருக்கும். அதன் கீழ்க் கோடிடுக.**

13. **மீன்களில் சில குட்டி ஈனுவன. சுறா மீன் குட்டி ஈனும்.** ஆகவே,
(1) மீன்களில் சில முட்டையிடுவன.
(2) சுறா மட்டுமே குட்டி ஈனும் மீன்.
(3) பல மீன்கள் முட்டையிடுகின்றன.
14. **என்னிடம் கதைப் புத்தகங்களுமுண்டு. பெரும்பாலும் நான் கதைகளை வாசிப்பேன்.** ஆகவே,
(1) என்னிடமிருப்பவையெல்லாம் கதைப் புத்தகங்களே.
(2) நான் எப்பொழுதும் கதைகளையே வாசிப்பேன்.
(3) என்னிடம் வேறு புத்தகங்களுமுண்டு.
15. **இலங்கையிலே மிகப் பெரிய நதி மகாவலிகங்கை; களனிகங்கையும் இலங்கையின் பல நதிகளில் ஒன்று;** ஆகவே,
(1) களனிகங்கை, மகாவலிகங்கையிலும் பெரிய நதி.
(2) மகாவலி களனிகங்கையிற் பெரியது.
(3) மகாவலி களனிகங்கையிற் சிறியது.
16. **அபர்ணா பெரும்பாலும் தைத்துக் கொண்டேயிருப்பாள்.** ஆகவே,
(1) அபர்ணா சிலவேளை தைக்காமலிருப்பாள்.
(2) முழுநேரமும் அபர்ணா தைத்துக்கொண்டேயிருப்பாள்.
(3) சிலவேளை அபர்ணா தைத்துக்கொண்டிருப்பாள்.

★ **கீழே தரப்பட்டிருக்கும் விவரத்தை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

அந்த நாட்டில் தோற்றமும், பொலிவும், வனப்பும், உடற்கட்டு முள்ளவர்களில் ஒருவன் சுகுணன். எனினும், அவனைக் காட்டிலும் இனிமையான சுபாவமும், இரக்க சிந்தையுமுடைய வன் குமணன்.


17. அந்த நாட்டில் உள்ளவர்களில் தோற்றமும், பொலிவும் மட்டுமுள்ளவன் சுகுணன்.
(சரி, பிழை, கூறமுடியாது)
18. சுகுணனைப் போன்ற பலர் அந்த நாட்டில் வாழ்ந்தனர்.
(சரி, பிழை, கூறமுடியாது)
19. சுகுணன் குமணனைக் காட்டிலும் இனிமையான சுபாவமுடையவன்.
(சரி, பிழை, கூறமுடியாது)
20. குமணன் நல்ல உடற்கட்டுடையவன்.
(சரி, பிழை, கூறமுடியாது)
21. இரக்கம் என்பது பிறர் துன்பம் கண்டு சந்தோஷப்படும் மனநிலை.
(சரி, பிழை, கூறமுடியாது)

★ **பின்வரும் சொற்கள் ஒத்தகருத்துடையனவாயின் "ஒ" என்றும் வெவ்வேறு கருத்துடையனவாயின் "எ" என்றும் எழுதுக.**

22. தென்கிழக்கு - வடமேற்கு (..............)
23. அண்மை - சேய்மை (..............)


★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

24. 15 பயணிகளைக் கொண்ட பேருந்தின் சில்லுகளின் எண்ணிக்கை 6 ஆகும். இதே பேருந்தில் 60 பேர் பயணம் செய்தால் பேருந் தில் இருக்கும் சில்லுகளின் எண்ணிக்கை யாது?
(1) 6 (2) 12 (3) 24 (4) 30
25. எந்த மூன்று இலக்கங்களையும் கூட்டினாலும், பெருக்கினாலும் ஒரே விடைதான் வரும்?
(1) 2,3,4 (2) 1,2,4 (3) 1,2,3 (4) 10,2,5
26. ஒரு விளையாட்டுக்கார் ஒவ்வொரு 6 மணித்தியாலங்களுக்கும் 3 மின்கலங்களைப் பயன்படுத்துகின்றது. மின்கலங்கள் ஒரு பைக்கற்றில் 4 வீதம் விற்கப்படுகின்றன. அந்தக் கார் 48 மணித்தியாலங்களுக்கு ஓடுவதற்கு எத்தனை பைக்கற் மின்கலங்கள் தேவை?
(1) 6 (2) 8 (3) 18 (4) 24
27. நிருத்தனாவின் பாட்டி 1939இல் பிறந்தார். 1999இல் நிருத்தனாவின் பாட்டியின் வயது நிருத்தனாவின் வயதின் ஐந்து மடங்காக இருந்தது. நிருத்தனா பிறந்தது எப்போது?
(1) 1977 (2) 1978 (3) 1987 (4) 2002
28. ஒரு கட்டடத்தின் பின்புறத்தில் சூரியன் இருப்பதைப் படம் காட்டுகின்றது. உருவாகும் நிழல் எவ்வாறு இருக்கும் என்பதைத் தெரிவுசெய்க.





★ **எண்கோலத்தை அறுக்கூட்டுக்குள் ... எண்ணை எழுதுக.**

29.




30.





★ **கீழே தரப்பட்டுள்ளவதமான விடை... செய்து அதன் கீழ்க்**

31. சூட்டுக்குக் குளிர் ...க்கு
(புத்திசாலி, மடையமிலேச்சன்)
32. பேதைக்கு அறிவா...லோபிக்கு
(முட்டாள், பேயன், ... வள்ளல்)
33. காலுக்கு முக்கால் ...க்கு
(ஒன்று, ஒன்றரை, ...டு)

★ **ஒழுங்குபடுத்தும்போ...வதன் கீழ்...**

34. தங்கை, நான், தம்...ம்மா
35. மணி, நாள், நிமிட...க்கன்

★ **கீழ்வரும் வினாக்களி...க்கியத்தை ... பொருத்தமற்ற குறியீட் கீழே கோடி...**




## 2
நேரம்:- 1மண...

★ **கீழுள்ள பந்தியை வாசி... 27வரையுள்ள... விடை தருக.**

வீதிவழியே மான்போலோடிவந்த பன்... சிறுமியைக் காற்றாய்வந்த மோட்... ஒன்று மோதியது. அ... வெள்ளத்தி... சின்றிக் கிடந்தாள். ... சிலர் மூச்சை... சிறுமிக்கு முதலுதவி... சிலர் மோ... ஓட்டுநரைத் தாறுமாறுந்தையை இ... தாய் தன் ஒரேயொருகாணத் தலை... ஓடி வந்தாள். செய்வதறியாதிகைத்தாள். ... வழியாக வந்த செஞ்சங்க வாகன... கைகொடுத்தது. அதில் சிறுமியை... ஏற்றிக்கொண்டு மருத்... விரைந்...

01. மோட்டார் சைக்கிளின் எதற்கு ஒப்...டுள்ளது?
..............................................
02. பந்தியிலுள்ள உ... வ... எது?
..............................................
03. செஞ்சிலுவைச் சங்கம... நிறுவன...
..............................................
04. காற்றாய்ப் பறத்தல் என்ன?
..............................................
05. "கைகொடுத்தல்" என்ன?
..............................................
06. பந்தியில் உள்ள இ... ஒன்று எ...
..............................................
07. கணவனை இழந்த ...றுமியின் ... அழைக்கலாம்? ..............................

★ **ஒத்தகருத்துள்ள சொ...**

08. வீதி ..................
09. பாதசாரி ..................
10. மருத்துவம் ..................
11. ஓட்டுநர் ..................

★ **எதிர்க்கருத்துள்ள சொ...**

12. கோலம் ..................
13. ஏற்றிக்கொண்டு ..................


★ **பன்மைச் சொல் எழுதுக**

14. ஒன்று ..................
15. தாய் ..................
16. மோதியது ..................
17. வாகனம் ..................
18. பாடலில் உள்ள பெண்ணைச்சொ...
..............................................
19. பாடலில் உள்ள ஒன்றி...னைச்சொ...
..............................................

★ **ஆங்கிலச் சொல்லை எ...**

20. பன்னிரண்டு ..................
21. இரத்தம் ..................
22. முதலுதவி ..................
23. மருத்துவமனை ..................

ரிந்து வெற்றுக்கூட்டுக்குள் வரவேண்டிய




பொருத்தமான விடைகளைத் தெரிவு
டிடுக.
ல, மூடனுக்கு
பேதை, மிலேச்சன்)
போல, உலோபிக்கு
லைஞன், வள்ளல்)
ல, அரைக்கு
று, இரண்டு)
டுவில் வருவதன் கீழ்க் கோடிடுக.
அப்பா, அம்மா
பாரம், செக்கன்
ரியான வாக்கியத்தை அமைப்பதற்குப்
உருவின் கீழே கோடிடுக.
டில் சென்றது
சாலை கேட்டது
த்தியசாலை இருந்தான்
பணம்
ம்வரை இருந்தாள்
க்கு
யில்
கடைக்குச்

## குதி -2

நேரம்:- 1மணி 15 நிமிடம்

01முதல் 27வரையுள்ள வினாக்களுக்கு

துள்ளி ஓடிவந்த பன்னிரண்டு வயதுச்
பறந்து வந்த மோட்டார்ச் சைக்கிள்
ர் இரத்த வெள்ளத்தில் மூச்சுப் பேச்
சாரிகள் சிலர் மூச்சையடைத்திருந்த
சய்தனர். சிலர் மோட்டார் சைக்கிள்
ஏசினர். தந்தையை இழந்த சிறுமியின்
களைக் காணத் தலைவிரிகோலமாய்
பாது திகைத்தாள். அப்பொழுது அவ்
ழவைச் சங்க வாகனம் அவளுக்குக்
ந்தவர்கள் சிறுமியையும், தாயையும்
வமனைக்கு விரைந்தனர்.
வகத்தை எதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்

.......................................
ந்தொடர் எது?
.......................................
எத்தகைய நிறுவனம்?
.......................................
றால் என்ன?
.......................................
ல் என்ன?
.......................................
மொழி ஒன்று எழுதுக.
.......................................
ந்தச் சிறுமியின் தாயை எவ்வாறு
.......................................
எழுதுக
..........
..........
..........
..........
எழுதுக.
..........
..........
..........
..........
..........
..........
ால் வினைச்சொல் ஒன்று எழுதுக.
.......................................
பால் வினைச்சொல் ஒன்று எழுதுக.
.......................................
துக.
..........
..........
..........
..........


★ **கீழ்வரும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொற்களைப் பந்தியில் இருந்து எழுதுக.**

24. Deer .............................. 25. Wind ..............................
26. Girl .............................. 27. Vehicle ..............................

★ **பின்வரும் பாடல் வரிகள் அழகு, அன்பு, கருணை, வீரம், தேசப்பற்று என்பவற்றை வெளிப்படுத்துகின்றன. அவை வெளிப்படுத்தும் உணர்வினை அப்பாடல்களுக்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

28. காலைத்தூக்கி கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா ..............................
29. உடலில் உறுதி உடையவரே
உலகில் உறுதி உடையவராம் ..............................
30. புள்ளிப் புள்ளி மானே
துள்ளித் துள்ளி ஓடிவா ..............................
31. நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக் கல்லால் அடிக்காதே ..............................
32. இலங்கை எங்கள் தாய்நிலம்
இணையில்லாத எழில் நிலம் ..............................

★ **கீழே தரப்பட்டுள்ள பரிசோதனை அமைப்பை நன்கு அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**


33. 



இங்கு பயன்படுத்தப்பட்ட வில்லை வகை எது? ..............................


34. ஒளிப்புள்ளி விழும் இடத்தில் உள்ள பஞ்சுக்கு யாது நடைபெறும்? ..............................
35. இப்பரிசோதனை மூலம் நாம் அடையும் பயன் பின்வருவனவற்றுள் எது எனத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.
(1) சூரிய ஒளிமூலம் மின்குமிழை எரித்தல்
(2) சூரியனிலிருந்து பெறும் வெப்பத்தால் உணவு சமைக்கலாம்.
(3) சூரிய வெப்பத்தால் மின்சாரத்தைப் பெறலாம்.


★ **பின்வரும் உருக்கள் உடற்கல்விப் பாடத்தின்போது மாணவர்களால் செய்துகாட்டப்பட்ட நிகழ்வுகள் ஆகும். அவை குறித்து நிற்கும் செயற்பாடுகளைத் தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து எழுதுக.**

ஒற்றைச்சில்லு வண்டி, கரடிநடை, சீன எழுப்பம், சமநிலையில் நிற்றல், நண்டு நடை, வீச்சலாட்டம்.

36. 
..............................

37. 
..............................



..............................


39. 
..............................


★ **கீழ்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


40. 45 ரூபாவுக்கு இரண்டு கொப்பிகள் வாங்கமுடியும். எனில், 225 ரூபாவுக்கு எத்தனை கொப்பிகள் வாங்கமுடியும்? ..............................
41. சம அளவான 8 தோடம்பழங்களின் நிறை 880 கிராம் ஆகும். அதில் 5 தோடம்பழங்களின் நிறை யாது? ..............................கிராம்
42. தந்தையின் வயது தற்போது மகனின் வயதைப் போன்று 4 மடங்காகும். 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையின் வயது 50ஆக இருந்தது. மகனின் தற்போதைய வயது யாது? .............................. வருடங்கள்
43. ஒரு வியாபாரி தன்னிடமிருந்த தேனை 150ml கொண்ட 75 போத்தல்களிலும், 75ml கொண்ட 80 போத்தல்களிலும் அடைத்தார். அவரிடம் இருந்த தேனின் அளவு யாது? ..............................லீற்றர் ..............................மில்லிலீற்றர்
44. மாலாவிடம் உள்ள பணத்தைவிட 175ரூபா கூடுதலாக கமலாவிடம் பணம் உள்ளது. இரண்டு பேரிடமும் உள்ள மொத்தப் பணம் 475ரூபா ஆகும். கமலாவிடம் உள்ள பணம் எவ்வளவு? ..............................ரூபா
45. 125கிராம் தேயிலையின் விலை 4ரூபா 50சதம் ஆகும். 750கிராம் தேயிலையின் விலை யாது? ..................ரூபா ..................சதம்
46. ஒரு பெட்டியில் 3 டசின் சன்லைட் கட்டிகளை அடுக்கலாம். 216 சன்லைட் கட்டிகளை அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவை? ..............................
47. ஒரு புத்தகத்தின்விலை 14ரூபா ஆகும். ஒரு பேனையின் விலை 5ரூபா ஆகும். 6புத்தகங்கள் வாங்கக்கூடிய பணத்திற்கு எத்தனை பேனைகள் வாங்கலாம்? ..............................
48. ஓர் உண்டியலில் 50 சத நாணயங்கள் 25உம், ஒரு ரூபா நாணயங்கள் 30உம், 2ரூபா நாணயங்கள் 18உம் இருந்தன. உண்டியலில் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு? ..............................
49. 350 தோடம்பழங்களில் 2/7 பங்கு அழுகிவிட்டன. மிகுதியாக உள்ள நல்ல பழங்கள் எத்தனை? ..............................

★ **கீழ்வரும் மின்குமிழ்கள் ஒளிரும் எனில் "ஆம்" எனவும் ஒளிராது எனின் "இல்லை" எனவும் எழுதுக.**

50. 
..............................

51. 
..............................

52. 
..............................

53 
..............................

★ **கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

54. இலங்கையில் காடுகளைப் பாதுகாக்கும் அமைப்பு எது? ..............................
55. இலங்கைக்கு அதிக வருமானத்தைப் பெற்றுத் தரும் பணப் பயிர் எது? ..............................
56. இலங்கையில் பறவைகள் சரணாலயம் எது? ..............................
57. சூரியனில் இருந்து பூமி எத்தனையாவது கோள் ஆகும்? ..............................
58. குழந்தைகளுக்கு உதவி செய்யும் சர்வதேச அமைப்பு ஒன்றின் பெயரை எழுதுக. ..............................
59. அயடின் சத்துக் குறைபாட்டால் ஏற்படும் நோய் எது? ..............................
60. வாய்மூலம் சொட்டு மருந்து கொடுக்கப்படுவது எந்த நோயைத் தடுப்பதற்கு ஆகும்? ..............................
61. வறிய மாணவர்களுக்கு உதவுதொகை வழங்குவதற்கும், பாடசாலை அனுமதி பெறுவதற்கும் அரசினால் நடத்தப்படும் பரீட்சை எது? ..............................

★ **கீழே கூறப்பட்ட திசை வழிகாட்டலுக்கு அமைய வெற்றுக் கூட்டில் வரவேண்டியவற்றை எழுதுக.**

| | | |
|---|---|---|
| | | |
| | வீடு | |
| | | |

61. வீட்டிற்குக் கிழக்கே மரம் உள்ளது.
62. மரத்திற்கு வடக்கே கொடி உள்ளது.
63. வீட்டிற்குத் தெற்கே கிணறு உள்ளது.
64. கிணற்றுக்கு மேற்கே நாய் உள்ளது.
65. வீட்டிற்கு மேற்கே பூனை உள்ளது.
66. பூனைக்கு வடக்கே பிள்ளை உள்ளது.
67. கிளிக்கு வாயுமூலையில் வீடு உள்ளது.
68. கடைக்குத் தெற்கே கிணறு உள்ளது.

★ **கீழ்வரும் சொற்கள் எப்பாடச் செயற்பாட்டுடன் தொடர்புபட்டது எனத் தெரிந்து உரிய கூட்டினுள் '✓' என அடையாளமிடுக.**


| | சொற்கள் | தையல் | சித்திரம் | ஆக்க அலங்காரம் | நடனம் | சங்கீதம் |
|---|---|---|---|---|---|---|
| 69. | வயலின் | | | | | |
| 70. | [illegible] | | | | | |
| 71. | [illegible] | | | | | |
| 72. | [illegible] | | | | | |
| 73. | தூரிகை | | | | | |
| 74. | இராகம் | | | | | |
| 75. | இரேகை | | | | | |

★ **நான் புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு......... என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல்வேண்டும்.**

76. ..............................
..............................
77. ..............................
..............................
78. ..............................
..............................
79. ..............................
..............................
80. ..............................
..............................
81. ..............................
..............................

தயாரிப்பு:
**திரு. கே. அன்பழகன் (ஆசிரியர்)**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
11
-
03
-
1944

உதிர்வு
26
-
06
-
2002

## அமரர் வல்லிபுரம் தியாகராஜா

ஸ்தாபகர்

(ஐடியல் கிறீம் ஹவுஸ், ஐடியல் ஸ்ரார் மல்ரி சென்ரர்)

பண்பிற்கோ இமயமெனப் பரிவிற்கு அன்னையென
நண்பிற்கோ வாய்மையுடை நல்லறிவுத் தோழனென
கண்ணுக்குள் ஒளிபோல கடுகிவந்தே இடர்களைவோய்!
சிந்தையிலே அறம்வழுவாத் தருமநெறி தேனொழுக
வந்தனையில் வாய்மையொடு வஞ்சமிலா முகம் மலர
அந்தோஅந் தோவென்று அரைநொடியில் மனைவி மக்களழ
விந்தையிலும் விந்தையென விண்ணுலகு விரைந்தாயே!

*12/5, சந்தணமாதா கோயில் வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

*மனைவி, மகள், மகன்மார்,*
*மருமகன், சகோதரர்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

(C/22958)

# வீடு வீடாகப் பத்திரிகை போட்டவர் இன்று இந்தியாவின் ஜனாதிபதி

**இந்தியாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார் பிரபல அனுசக்தி விஞ்ஞானி அப்துல் கலாம். அவரது வாழ்க்கைக் குறிப்பின் சிறிய தொகுப்பு "லங்காதீப" பத்திரிகையில் வெளியானது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## உழைப்பு மற்றும் விடாமுயற்சிக்கு எடுத்துக் காட்டாகிறார் கலாம்


தென்னிந்திய நகரமான இராமேஸ்வரத்தில் வறிய குடம்பமொன்றில் பிறந்து, அணுமின்துறையில் சாதனை புரிந்து, ஐக்கிய பாரதத்தின் ஒளிவிளக்கனைய மனிதரொருவர் இந்தியாவின் பன்னிரண்டாவது ஜனாதிபதியாகப் பதவியேற்கிறார்.

இந்திய ஏவுகணைத் தொழில்நுட்பத்தின் ஆரம்ப கர்த்தாவான சிரேஷ்ட விஞ்ஞானி அப்துல்கலாம், தன் புதிய பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்திய அரசியலமைப்பின்படி ஜனாதிபதி ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். முன்னைய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனின் பதவிக்காலம் நேற்றுமுன் தினத்துடன் முடிவுறுகிறது.

இந்தியாவில், மத்திய அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களதும், மாநில சட்டமன்ற உறுப்பினர்களதும் வாக்களிப்பின்மூலம் ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுகிறார். இம்முறை அவ்வகையான 4 ஆயிரத்து 785 உறுப்பினர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் 4ஆயிரத்து 152 உறுப்பினர்கள் அப்துல் கலாமுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினால் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்ட லக்ஷ்மி சாகலுக்கு 459 வாக்குகளே கிடைத்தன. 174 வாக்குகள் செல்லுபடியற்றவையாகக் கணிக்கப்பட்டன. டாக்டர் அவுல் பகீர் ஜெய்னுலப்தீன் அப்துல் கலாம் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தில் 1931ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி பிறந்தார். திருச்சி புனித யோசெப் கல்லூரியில் தனது விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட அவர், சென்னை தொழில்நுட்ப நிறுவனத்தில் வேதியியலில் சிறப்புப் பட்டம் பெற்றுக்கொண்டார். 1958ஆம் ஆண்டில் இந்திய பாதுகாப்பு தொழில்நுட்ப அபிவிருத்தி நிறுவனத்தில் இணைந்துகொண்ட அவர், பின்னர் இந்திய தொழில்நுட்ப மையத்தில் சேர்ந்துகொண்டார். செய்மதிகளை விண்வெளிக்கு அனுப்பும் றொக்கெட்டுகளைத் தயாரிப்பது மற்றும் அபிவிருத்தி செய்வதற்குப் பொறுப்பான பணிப்பாளரான அவர் அவ்வாறான ஆராய்ச்சிகள் பலவற்றிற்குத் தலைமை தாங்கினார்.

பாதுகாப்பு நடவடிக்கையின் பொருட்டு நீண்டதூரம் சென்று தாக்கும் ஏவுகணைத் தொழில்நுட்ப வளர்ச்சியில் பிருதிவி, திரிசூல், ஆகாஷ, நாக் மற்றும் 'அக்னி' ஆகிய ஏவுகணைகளை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்தது இவரது முயற்சியின் வெற்றிகளாகும். இந்தி



யாவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் இணைக்கும் வகையில் இவரால் விண்ணில் ஏவப்பட்ட 'அக்னி' ஏவுகணை இவரது திறமையை வெளிக்காட்டியது. இந்திய விஞ்ஞான அறிவு உயர் நிலைக்கு எடுத்துச் செல்வதற்கும், பின்தங்கிய நிலையிலிருந்த தொழில்நுட்ப நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படவும் செய்த இவரது சேவையால் கௌரவம் ஏற்பட்டது. அதற்காக இவரால் அதியுயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமும் உருவாக்கப்பட்டது. இவர் ஏவுகணை தொழில்நுட்ப ஆய்வில் காட்டிய திறமை காரணமாக பாதுகாப்பு தொழில்நுட்ப அபிவிருத்தி திணைக்களத்தின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

இந்திய தேசிய விஞ்ஞான் அக்கடமி, இந்திய வான்வெளி விஞ்ஞான கழகம் உட்பட்ட ஏராளமான தொழில் அமைப்புக்களின் அங்கத்தவரான அப்துல் கலாம் இரண்டு புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

இந்திய நாட்டுக்கு இவர் ஆற்றிய அரும்பணிகளுக்காக இந்தியப் பிரஜையொருவருக்கு வழங்கப்படும் அதியுயர் விருதான 'பாரத ரத்ன' விருது 1997இல் இவருக்கு வழங்கப்பட்டது.

மகாத்மாகாந்தியின் அர்ப்பணிப்புகளால் கவரப்பட்ட இவர், ஏவுகணை விஞ்ஞானத்தில் இந்தியாவை வீறுநடைபோட வைத்தார். இந்தியா சுதந்திரமடைந்தபோது இவருக்கு வயது 16. அப்துல் கலாமும் மகாத்மாகாந்தியைப் போன்றே சாந்தமும் எளிமையும் மிக்கவர். வஞ்சகமற்ற மனிதர். மக்களை மிகவும் நேசிப்பவர். எவராலும் இலகுவில் சந்திக்க முடிந்த மனிதராவார்.

இவரது இப்புதிய பதவி பெரிய அதிகாரங்கள் அற்றதாக இருப்பினும் முழு இந்தியாவின் வீர புருஷராக அவர் விளங்குகிறார். இவரது கண்டுபிடிப்புக்களே இவரை இந்த நிலைக்கு உயர்த்தியது. அவற்றின் மூலம் இந்திய நாட்டின் பாதுகாப்புக்கு இவர் பெரும் பங்காற்றியுள்ளார்.

இவர் தமிழ்க் கவிதைகளில் இரசனை மிக்கவர். கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு கொண்டவர். வீணை வாசிக்கவும் தெரிந்தவர். பாரதியாரின் பாடல்களில் விருப்பம் கொண்டவர். முன்னேற்றமடைந்த நாடாக விளங்குவதற்குரிய திறமை இந்தியாவுக்கு இருக்கவேண்டும் என கலாம் கூறுகிறார். இந்திய இளைஞர்கள் வாழ்வில் உயர் கனவு காணவேண்டுமெனக் கூறும் அவர், அவ்வாறான கனவுகளே இளைஞர்களுக்குச் சாதனை படைக்க உதவும் எனக் கூறுகிறார். சாதனை புரியும் கனவுகளுடன்கூடிய இளைஞர்களின் முயற்சியே இந்திய எதிர்காலத்துக்கு அவசியம் என்பது அவர் எப்போதும் வற்புறுத்தும் விடயமாகும். ஒன்றுபட்ட சமூக பலத்தின் மூலம் குறிக்கோளை அடைய முடியுமென்பது அவரது கருத்தாகும்.

"பெரிதாகச் சிந்தியுங்கள். 100 கோடி மக்களான நாம் 100 கோடி பெரிதாகச் சிந்தித்துக் கருமமாற்ற வேண்டும்." இளைஞர் சமூகத்திற்கு அவர் கூறும் அறிவுரை இது. தமது வெற்றியின் இரகசியம் தனது பெற்றோர்தான் என இப்பிரபல விஞ்ஞானி கூறினார். அவருடைய தந்தையார் ஜெயினுலாப்தீன் சர்க்கயார் பஞ்சாயத் தலைவராயிருந்தவர். அவர் பல வள்ளங்களின் சொந்தக்காரராவார். ராமேஸ்வரத்துக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே வழிபாட்டுக்குச் செல்லும் யாத்திரீகர்களை அழைத்துச் செல்ல அப்படகுகள் பயன்படுத்தப்பட்டன.

1964ஆம் ஆண்டில் தனுஷ்கோடியில் ஏற்பட்ட புயலின் பின்னர் அப்படகுச் சேவை கைவிடப்பட்டது. இந்துக்களுடனும் அவருடைய தந்தையார் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார். ராமநாதசுவாமி கோயிலில் பூஜை செய்வோருடனும் அவர் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். ஒவ்வொரு வருடமும் அவருடைய தந்தையார் இந்துக்கோயிலால் கௌரவிக்கப்பட்டார்.

குடும்பத்தில் இளையவரான கலாம், சிறுவயது தொட்டே வித்தியாசமானவராக இருந்தார். இளையவரானபடியால் குடும்பத்தவரின் அன்புக்கும், தனிக் கவனத்துக்கும் ஆளானார். சிறுவயதிலிருந்தே வாசிக்கும் பழக்கத்தைப் பெரிதும் விரும்பினார். அவரது வீட்டுக்கு அருகிலிருந்த நூல்நிலையம், அவரது கல்வி மேம்பாட்டுக்கும் வெற்றிக்கும் அத்திவாரமாக விளங்கியது. கையில் கிடைக்கும் எவற்றையும் வாசிப்பது அவரது விருப்பமான செயலாயிற்று. அவர் மாமிசம் உண்பதில்லை. அத்தோடு அவர் பிரமச்சாரியும்கூட. தான் திருமணம் செய்திருப்பின் தனது விஞ்ஞான சாதனைகளில் பாதிகூட நிறைவேறியிருக்காது எனக் கலாம் கூறினார்.

கலாம் தினமும் காலையிலும் மாலையிலும் இருவேளை தொழுகை செய்கிறார். ராமேஸ்வரத்தில் புதிய ஜனாதிபதிக்கு தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்க அவரது உறவினர்கள் தற்போது தயாராகி வருகிறார்கள். கலாமினால் அவருடைய பிறந்த ஊர் எதுவித நன்மையும் பெறவில்லை. ஆகக் குறைந்தது தனது உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ அவர் ஒரு வேலைவாய்ப்புக்கூடப் பெற்றுக்கொடுக்கவில்லை. அப்படியான பழக்கம் அவரிடம் இருக்கவில்லை. இருப்பினும் ராமேஸ்வரத்து மக்கள் அவரைக் குறைகூறியதில்லை. "அவர் எமது கிராமத்தவர். அதுவே எமக்குப் போதும்" இப்படி அவரது கிராமத்தவர்களும் மற்றவர்களும் கூறி கலாமைப் பாராட்டுகிறார்கள்.

'அக்னி' ஏவுகணையைத் தயாரித்த இந்த மனிதர் பகவத்கீதைக்கு மதிப்பளிக்கிறார். மக்களை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஏவுகணை ஏழைமக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்தப்படவேண்டுமென்பது இவரது வாதமாகும்.

அழிவுக்குப் பயன்படுத்தவெனத் தயாரிக்கப்படும் ஏவுகணையை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் கையாளவேண்டுமென்பதே இவரது அவாவாகும். இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்த அவசியமான அம்பு போன்ற கொயில் உபகரணத்தை இவர் தயாரித்துள்ளார். இதன்மூலம் விபத்துக்களின்போது இரத்தம் வெளியேறும் அபாயத்தைத் தடுக்க இயலும்.

அக்னி ஏவுகணை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போலியோ நோயாளர்களுக்காக 'கலிபர்' இயந்திர சாதனத்தைத் தயாரித்தது இவரது நினைவுகூரத்தக்க முயற்சியாகும்.

கலாமின் ஏவுகணைத் தொழில்நுட்பம் வருடா வருடம் முன்னேற்றம் கண்டு செல்கிறது. 3500° செல்சியஸ் வெப்பத்தைத் தாக்குப் பிடிக்கும்

**தமிழில்: விஜயஸ்ரீ**

திறன்கொண்ட ஏவுகணையாக 'அக்னி'யை இவர் தயாரித்துள்ளார். கலாம் இந்திய ஏவுகணைத் தயாரிப்பின் தந்தை. தமது சகோதரன் பாரதரத்ன விருது பெற்ற தினத்தில் தாமும் குடும்பத் தினரும் புதுடில்லிக்குச் சென்றிருந்ததாக கலாமின் மூத்தசகோதரரான மொஹமட் மறைக்காயர் கூறினார். இந்திய அரசின் விருது தனக்கு மிக உதவியது என முதலில் அப்துல் கலாம் கூறினார். தனது நெருங்கிய உறவினர், நண்பர்களுக்கு புரியாணி வழங்குமாறு மூத்தசகோதரருக்கு கலாம் பணம் அனுப்பிவைத்தார்.

கலாமின் குடும்பத்திலுள்ள படித்த நபர் அவர் ஒருவர் மட்டுமே. மற்றைய சகோதர சகோதரிகளில் எவரும் பாடசாலைக் கல்விகூடக் கற்றவர்களல்லர். பாடசாலை நாள்களில் கலாம் பத்திரிகை விநியோகிக்கும் தொழில்கூட செய்துள்ளார். அவருடைய மூத்தசகோதரர் ஒரு பத்திரிகை விற்பனையாளராவார்.

அன்று பத்திரிகை விநியோகித்த இளைஞர் இன்று இந்தியா முழுவதும் - ஏன் உலகம் முழுவதும் - பத்திரிகைகளில் அடிபடும் மனிதராகியுள்ளார்.

★

## மனித சகோதரத்துவம் பேணுவதே சமயம் போதிக்கும் வாழ்வுமுறை

**ஞானக்கதிர்**

இறைவன் படைத்த உன்னதமானவற்றுள் உயர்ந்தபேறு மனிதப் பிறவியாகும்.

இந்த மனிதம் புனிதமாவதற்காக உருவாக்கப்பட்டவையே மதங்களாகும். மதங்கள் அனைத்துமே அவனியை அன்போடும் ஆதரவோடும் அமைதியாகவும் வைத்திருப்பதற்காக உள்ளார்ந்த பிரார்த்தனைகளைத் தினம்தினம் கணம் கணம் நடத்திய வண்ணம் இருக்கின்றன.

துல்லியமான அறிவினைப் பெறத்துடிக்கின்ற மனிதனை ஒரு கணம் சிந்திக்கத் தூண்டும் வகையில், பறவைகள், விலங்கினம், மீனினம், எறும்புகள் ஏனைய இன்னோரன்ன உயிரினங்கள் தத்தமக்குள்ளே சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் நல்லுறவுகளையும் ஐக்கியத்தையும் பேணிக் கொள்கின்றன.

இஃது எம்கெல்லாம் அதிசயத்தைத் தருகின்றதல்லவா? அவை எங்கே கற்றுக்கொண்டன? இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது திருமூலர் மொழிந்த "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் கூற்றானது சாலவும் பொருத்தமானதே.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனப் பகர்ந்த பூங்குன்றனார், "அயலவனை நேசி" எனத் திருவாய் மலர்ந்த ஜேசுபிரான், அன்புமழை பொழிந்த அல்லா, காருண்யம் கனிந்த கௌதம புத்தர், வாழும் வழிகாட்டிய வள்ளுவப் பெருமான் யாவருமே உலகை உய்விக்க வந்த தெய்வீக சம்பந்தமுடையவர்கள்.

அவர்கள் யாருக்காக வாழ்ந்தார்கள்? யாரை எண்ணி வாழ்ந்தார்கள்? பலனுக்காய் வாழவில்லையே. கீதையில் கண்ணன் கூறியதைப்போல ததமது கடமையைச் செய்தார்களேயொழிய பலனை எதிர்பார்க்கவில்லை. மாறாகப் பலன்களைத் தனித்துவமாக அனுபவிப்பதற்கு முற்படுகின்ற, முற்படும் வேளையிலேதான் உறவுகளில் விரிசல் ஏற்படுகிறது.

உறவுகள் பேதமடையும்போது இன, மத, தேசிய, ஐக்கிய சித்தாந்தங்கள் யாவுமே கேள்விக்குறியாகி விடுகின்றன. கேள்விக்குறிகளை ஆராய்ந்து இன, மத, தேசிய ஒற்றுமையினை மேம்படுத்துவதான சமுதாயப் பேறுகளை வென்றெடுப்பதே இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய விசுவாசமாகும்.

ஒரு தனிமனிதன் சந்தோஷமாக இருக்கவேண்டும் எனின், அவன் சார்ந்த குடும்ப அங்கத்தவர்கள் நல்லிணக்கமுள்ளவர்களாக மிளிர வேண்டும். அக்குடும்பம் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்றால் அக்குடும்பம் சார்ந்த அயலவர்களோடு நல்லுறவுகளைப் பேண வேண்டும்.

அயல் சிறக்கவேண்டும் எனில் அவ்வயல் சார்ந்த சமூகம் சகோதரத்துவமாக சந்தோஷிக்க வேண்டும். சமூகங்களிற்கிடையே பேதமற்ற நிலை தோன்றவேண்டும் என்றால் அவை சார்ந்த நாட்டிலே இன, மத, மொழி சார்ந்த மக்களிடையே புரிந்துணர்வுடன்கூடிய தர்மநிலை நீதியோடியைந்த வாழ்வுநிலை பேணப்பட வேண்டும்.

வாழ்வுநிலை பேணப்படவேண்டுமாயின் மதங்களுடாகவே ஆற்றுப்படுத்தமுடியும் எனும் கருத்து வலுப்பெறுகிறது. மேலும் நோக்குமிடத்து எப்போது மதம் தோன்றியது என்பதல்ல பிரச்சினை. எல்லா மதங்களிலும் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. எல்லா மதங்களைச் சார்ந்தவர்களிலும் வைத்தியர்கள், பொருளியலாளர்கள், பேராசிரியர்கள், தத்துவஞானிகள், விவசாயிகள் என ஆயிரம் ஆயிரம் உத்தமர்கள் தோன்றியவண்ணமே உள்ளனர்.

எனவே, யார் பெரிது என்பதல்ல பிரச்சினை மனிதமும், நல்ல சகோதரத்துவமும் வளர்க்கப்படுகின்ற பாங்கே முக்கியமானது.

ஒரு மனிதன் உள்நாட்டிலாயினும் சரி, வெளிநாட்டிலாயினும் சரி அந்நாட்டு மக்களின் கலை, கலாசார விழுமியங்களைப் புரிந்துகொள்ளும் தகுதியை விசாலிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இது எந்த ஒரு அரசுக்கும் பொருந்துவதாகும். இந்நிலையில் தொக்குநிற்கும் கருப்பொருள் அகத்தூய்மையாகும். இத்தூய்மை ஒருவனது முகத்தில் வெளிப்படும்போதுதான் சகோதரத்துவம் வேரூன்றுகின்றது.

தேநீர், சிற்றுண்டி, விருந்து கொடுப்பது மட்டுமல்ல, அடுத்தவனது துன்பத்தில் பங்குகொண்டு, அவனது துன்ப விடுதலைக்காக ஆண்டவனிடம் விண்ணப்பித்தல், பிரார்த்தித்தல், வேண்டுதல் ஆகியனவும் அடங்கும். இதனாலன்றோ சூரியன், சந்திரன், இயற்கை அனைத்தும் நீடு வாழ்கின்றன.

**கே.எஸ்.சிவஞானராஜா**

மாறாக வீதிகளின் கட்டுப்பாட்டைச் சீர்குலைத்தல், கல்வியைக் குழப்புதல், சமுதாய விழுமியங்களை அலட்சியம் செய்தல், ஆணவச் செயற்பாடுகள் யாவும் சகோதரத்துவத்தினைத் தோற்கடித்துவிடுகின்றன. வெற்றி பெறச் செய்ய வேண்டிய பொறுப்பானது கல்விசார் நிறுவனங்களுக்கும், ஆலயங்களுக்குமே சிறப்பாக உண்டு.

*நன்றி: ஞானச்சுடர்*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Alsation பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.தொடர்பு15/23, மாரியம்மன் வீதி (முருகேசர் வளவு), திருநெல்வேலி. (6374)

5 3/4 பரப்புக் காணியுடன் வீடு வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சபாபதி நாதன், நிலஅளவையாளர், சித் தங்கேணி. (6359)

## தவறிவிட்டது

வவுனியாவைச் சேர்ந்த கந்தசாமி சரஸ்வதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை வல்வெட்டித்துறை சமரபாகுவிற்கும் அம்பா பாடசாலைக் குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்நகரில் விஜய் சில்க்கில் ஒப்படைத்துதவவும். (6352)

150, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த அருட்பிரகாசம் சரஸ்வதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 338320183V) நல்லூருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (6358)

21/1, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைராஜா உதயகுமார் என்பவரது வி. அ. அட்டை (இல.0902030048) பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் து.அகிலன், 676, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (6376)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா, கொழும்பா? நாடகம் 3. யாழ்ப்பாணம். 4.இலக்கியக் கட்டுரைகள் 5.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6.ஒரு காதலின் கதை நாவல். (6317)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

அளவெட்டி வடக்கு பத்தானை ஞானவைரவர் ஆலய கட்டட வளர்ச்சிக்காக நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி.

இடம்: கந்தரோடை சவாரித் திடல்

காலம்: **04.08.2002** ஞாயிறு பிற்பகல் **1.00** மணி

போட்டிகள் யாவும் A,B,C என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

**கைக்கொடி சவாரிப் போட்டியும் இடம்பெறும்.**

**பிரவேசம் 10ரூபா**

*'ஞானவைரவர் ஆலயம்',*
*பத்தானை, அளவெட்டி வடக்கு.* (6382)

- ஆலய நிர்வாகம்.

## வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் அதிபர்

**அருட்செல்வி ஜெயசீலி றொட்றிக்கோ**

அவர்கள் தமது துறவற அர்ப்பண வாழ்வின் 25 ஆவது ஆண்டு நிறைவு நாளைக் கொண்டாடும் இந்நன்னாளில் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது அருட்பணி தொடர இறைவன் என்றும் அருள்புரிய வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம்.

*யா/நெடு.றோ.க. மகளிர் கல்லூரி,*
*நெடுந்தீவு.* (C/23050)

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்.







**D'cold**

**D'cold Balm, D'cold Inhaler & D'cold Cough Drops**

ஜலதோசம், மூக்கடைப்பு, தொண்டை கரகரப்பு, தலைப்பாரம், தலைவலி ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம்.

**D'cold** சுகமான வாழ்வுக்கு...

ஏக விநியோகஸ்தர்:- JEGHAN PHARMACY
NO.462/B, HOSPITAL ROAD, JAFFNA.TEL.021-2194, 3191 (C/23049)

சந்தைப்படுத்துவோர் PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.








**மிருக வைத்திய நிபுணர்களே!**

**கால்நடை பண்ணையாளர்களே!!**

**வியாபாரிகளே!!!**

**CIC நிறுவனத்தாரின் மகிழ்ச்சிகரமான செய்தி!**

உங்களுக்குத் தேவையான

✦ கால்நடை மருந்துகள் ✦ கால்நடை உணவு

✦ பண்ணைத் தளபாடங்கள்

அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள -

CIC கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்

199, கியூ வீதி, கொழும்பு -2.

CIC கால்நடை மருந்து வகைகளை மட்டுமே

விற்பனைசெய்யும் எமது ஏக யாழ். விநியோகஸ்தர்:

ஸ்ரீ மகாவிஷ்ணு

SRI MAHAVISHNU






70, 72, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(63..)


வடக்கு - கிழக்கில் உள்ள

# இந்து ஆலய விவரங்களை கல்வி அமைச்சு திரட்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு இந்து ஆலயங்களின் விவரங்களையும், புகைப் படங்களையும் திரட்டும் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்து ஆலயங்களின் விவரங்களை ஆவணப்படுத்தும் வகையில் மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களிடம் அதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் அவற்றை ஒப்படைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## INSTITUTION OF ENGINEERS, SRI LANKA
## IESL CENTRE - NORTHERN PROVINCE

**Talk**

*Place:* **Library Auditorium, University of Jaffna.**

*Time:* **09.30hours (SL. Time) Saturday, 27th of July 2002**

(a) "REVIVAL OF ECONOMY THROUGH GOOD TRANSPORT SYSTEM"
by Eng. Priyal de Silva, General Manager, Ceylon Government Railways.

(b) "ENGINEERING PROFESSIONALISM"
by Eng.B.R.O. Fernando, President of the Institution of Engineers, Sri Lanka.

All interested persons are cordially invited please.

*No. 536/1, K.K.S. Road.*
*2002.07.25* (6381)

**Eng.K.Sriskandarajah**
Secretary.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 - 10 - 1976



பாபாவின் திருவடியில்
21 - 07 - 1997

**செல்வன் பத்மநாதன் முரளிகுமார்**
(கொக்குவில் இந்து பழைய மாணவன்)

திதி: 26-07-2002

*நீர்க்கோல வாழ்வை துச்சமென நீர் எண்ணி எமை மறந்து சென்று*
*ஓர் ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்ததையா!*
*உங்கள் அன்பு வதனமும் எமை மகிழ்வித்த வார்த்தைகளும்*
*பார் உள்ளவரை மறக்க முடியாது தவிக்கின்றோம் தரணியில் நாம்.*


(6375)

மறக்க முடியாது தவிக்கும்:
அப்பா, அம்மா, மைத்துனர், அக்கா, அண்ணா, உறவினர்கள்.

*3, அம்பலவாணர் வீதி,*
*உடுவில்.*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
05 - 05 - 1942



விண்ணில்
06 - 08 - 2001

**அமரர் சின்னக்குட்டி தியாகராசா**
(தியாகு)
*(முன்னாள் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள ஒப்பந்தகாரரும், கர்ணன் வாணிப உரிமையாளரும்)*

திதி: 26-07-2002

உன்னைப் பிரிந்து ஓராண்டு கழிந்ததுவோ!
உனதுமுகம் மனதைவிட்டு என்றும் அகன்றிடுமோ!
புன்னகை சிந்துமுன் திருவுருவை - இனி இப்
பூவுலகில் எப்போது நாம் காண்போம் ஐயாவே!

(6379)

*330, யோகபுரம், மல்லாவி.*

- குடும்பத்தினர்.

### நாடாளுமன்ற அசம்பாவிதம் குறித்து:

# அரசு மற்றும் எதிர்க்கட்சிகள் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள்

## செய்தியாளர் மாநாடுகளில் மாறிமாறிச்சாடல்

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால் நடத்தப்பட்ட அநாகரிகமான குழப்பம் நாடாளுமன்ற ஜனநாயக சம்பிரதாயங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று கூறியிருக்கிறார் அமைச்சர் பீரிஸ்.

நாடாளுமன்றத்தில் அரசின் அடக்குமுறையினால் ஜனநாயகம் மறுக்கப்படுகிறது என்று குற்றம் சுமத்துகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமளிதுமளி, கைகலப்பு ஆகியன தொடர்பாக அரசுத் தரப்பும் எதிரணித் தரப்பும் தனித்தனியான செய்தியாளர் மாநாட்டை நடத்தி விளக்கமளித்தன.

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் நாடாளுமன்றக் குழு அறை ஒன்றில் அரசுத் தரப்பிலும் மற்றைய அறை ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்க்கட்சிகளும் எதிரும் புதிருமான செய்தியாளர் மாநாடுகளை நடத்தினர்.

இச்செய்தியாளர் மாநாட்டில் ஒரே விடயத்தை இரண்டு தரப்பினரும் இருவேறு கோணங்களில் கூறினர். ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தவும் தவறவில்லை.

அமைச்சர் பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் கூறியதாவது:-

18 வருடங்களில் இலங்கையின் பிரதமர் ஒருவர் உலக வல்லரசான அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார். ஜனாதிபதி புஷ்ஷுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள், பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில் முதலீடுகள், சுதந்திர வர்த்தக வலயம் அமைப்பது போன்ற அதிமுக்கிய விடயங்கள் குறித்துப் பேசிக்கொண்டிருக்கின்றார்.

அதேநேரத்தில், அரசின் துரித அபிவிருத்தித் திட்டங்களுக்கு உலக நாடுகளிடையே பெருகிவரும் ஆதரவைக் காணப்பொறுக்காத எதிர்க்கட்சியின் மிகவும் அநாகரிகமான முறையில் அதி உயர் சபையில் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் பட்ஜெட் அறிவித்தலின்படி 'வற்' வரி முறை தொடர்பான - மிகவும் முக்கியமான - விவாதம் நடைபெறவிருந்தது. காலை 10 மணிமுதல் மாலை 6.30 மணிவரை நாடாளுமன்ற அமர்வு நேரமும் நீடிக்கப்பட்டிருந்தது. இவ்விவாதத்தில் எதிர்க்கட்சியினருக்கே விவாதம் செய்யக் கூடுதலான நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது.

விலைவாசி உயர்ந்துவிட்டது என்று எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் அதற்கும் ஒத்துழைப்பு வழங்க மறுக்கின்றனர். 'வற்' வரி தொடர்பாக எதிர்க்கட்சியினர் தமது கருத்துக்களையும் சாதகமான விமர்சனங்களையும் சபையில் செய்திருக்கமுடியும். ஆனால், இதைக குழப்பியடிக்கவேண்டும் என்று திட்டமிட்டு நடத்திய அமளிதுமளியால் அந்த வாய்ப்பை அவர்கள் இழந்துவிட்டனர். இரண்டாவது வாசிப்பின் போது எதிர்க்கட்சியினரைப் பேசும்படி சபாநாயகர் பெயர் கூறி அழைத்தும் கூட அவர்கள் அதற்கு மதிப்பளிக்காமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் விவாதம் இன்றியே 'வற்' வரிகள் சட்டம் நாடாளுமன்றத்தில் சகல நிலைகளிலும் அங்கீகரிக்கப்பட்டன.

அங்கு அமைச்சர் லொக்கு பண்டார கூறுகையில்:-

ஜனாதிபதி சந்திரிகா அமைச்சரவைக் கூட்டத்துக்கு வரும்போது கைப்பையில் குண்டு வைத்திருந்தார் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. அமைச்சரவை உறுப்பினர் என்ற பொறுப்புகளுடன் இதனைத் தான் நாடாளுமன்றத்தில் அறிவித்தும் எதிர்க் கட்சியினர் அதை முடிப்பதாக இல்லை.

ஜனாதிபதி மீது இப்படி ஒரு குற்றச்சாட்டை ரவி கருணாநாயக்க சுமத்தி இருந்தால் அங்கேயே ஜனாதிபதி பையைத் திறந்துகாட்டி இருக்கலாமே! அநுராதபுரத்தில் போய் ஜனாதிபதி பையைத் திறந்து காட்ட வேண்டுமா? இது ஒரு கட்டுக்கதை. இதை மூடி மறைப்பதற்காகவே எதிர்க்கட்சியினர் கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்துகின்றனர். இவர்களுடைய கூச்சல்களைக் கேட்டு அரசாங்கம் ஒருபோதும் அஞ்சிவிடாது. தொடர்ந்து தனது அபிவிருத்திப் பணிகளைச் செய்யும் என்றார்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க அங்கு பேசுகையில்:-

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும் சந்தர்ப்பங்களிலேயே எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சைக் கேட்கவிடாமல் இடையூறு செய்கின்றனர். இது அரசுக்கு எதிரானதா? இல்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான ஆர்ப்பாட்டமா என்பதும் தெரியவில்லை.

சென்ற மாதம் நாடாளுமன்றினுள் இதேபோன்று கொடிகள், பதாகைகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அதை அடுத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இப்படியான அசம்பாவிதங்களுக்கு இடமளிக்கக் கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், இன்று அதேபோன்று பதாகைகளுடன் சபா பீடத்தின் முன் சென்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். கட்சித் தலைவர்களின் உடன்பாட்டை மீறிவிட்டனர். சண்டித்தனம் காட்டுகின்றனர். பதாகைகளும் போஸ்டர்களும் திடீரென வருவதில்லை. திட்டமிட்டு இங்கு வந்து குழப்பம் விளைவித்தனர் என்பதை உறுதிப்படுத்த இது ஒன்றே போதும் - என்றார் சமரசிங்க.

"அநுராதபுரத்தில் பேசிய ஜனாதிபதி, தனக்குள்ள அதிகாரங்களை வைத்து எந்த அமைச்சரையும் தூக்கி எறிய முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது சாத்தியப்படுமா?" என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

"அமைச்சரவை உறுப்பினர்களை நியமிக்கும்போது பிரதமரின் ஆலோசனையைப் பெறவேண்டும். அதே போன்று அமைச்சரவையிலிருந்து ஒருவரைப் பதவி நீக்கம் செய்யும் போது பிரதமரின் ஆலோசனை இன்றி செய்யமுடியாது. இதனை அரசமைப்பின் 44(1) பிரிவு தெளிவாகக் கூறுகின்றது. ஜனாதிபதி நினைத்த மாத்திரத்தில் எவரையும் அமைச்சரவையில் இருந்து நீக்கிவிடமுடியாது. முன்பு ஒரே கட்சி ஆட்சியில் அதிகாரமும் நிறைவேற்றுதலும் அவரிடம் இருந்தது. ஆனால், இன்று அதிகாரம் அவரிடம் இருந்தாலும், நிறைவேற்றும் பொறுப்பு நாடாளுமன்றத்திடம் தான் இருக்கின்றது" என்று அதற்கு அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார்.

இதேசமயம், எதிர்க்கட்சித் தலைவர் நடத்திய மாநாட்டில் எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

"அங்கு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாவது:-

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை அகௌரவப்படுத்தும் வகையில் அமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார். எனவே அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவர் மன்னிப்புக் கேட்கும் வரை எங்களுடைய போராட்டம் தொடரும்.

பொறுப்புமிக்க எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சுக்கு அரசுக் கட்சியினர் இடையூறு செய்தனர். பேச விடாமல் கூச்சல் போட்டனர். இந்தக் கூச்சல், குழப்பங்களுக்கு மத்தியில் பொது மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் 'வற்' வரி முறையை அங்கீகரித்துவிட்டனர்.

எதிர்க்கட்சியினருக்கும் பேச அனுமதி வழங்கப்படவில்லை. அடிதடியில் இறங்கிவிட்டனர். இவர்கள் அடக்குமுறையை மேற்கொள்கின்றனர். இவையெல்லாம் திட்டமிட்ட நடவடிக்கைகள் - என்றார்.

"கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் எதிர்க்கட்சியினரின் பெயர்களைக் கூறி சபாநாயகர் அழைத்தாரே?" என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு - "சபாநாயகர் பெயர் குறிப்பிட்டு அழைத்ததோ அல்லது சபாநாயகரின் அறிவிப்புக்களோ எங்களுக்குக் கேட்கவில்லை" என சாந் அமுனுகம எம்.பி.கூறினார்.

"கடந்த மாதத்திலும் இப்படியான குழப்பம் ஏற்பட்டது. அதையடுத்து போஸ்டர்கள் பதாகைகள் சபைக்குள் கொண்டுவரப்படமாட்டா என்று இணக்கம் ஏற்பட்டது. ஆனால் இன்று மீறப்பட்டு விட்டது. இது சரியா?' என்றும் செய்தியாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

"போஸ்டர் பிடிப்பதற்கும் பதாகைகளை ஏந்தவும் கூட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லையா?" என்று நிமல் சிறிபால டி சில்வா எம்.பி. குறிப்பிட்டார்.

"ஒருவர் பேசும்போது அவருடைய பேச்சுக்கு இடையூறு ஏற்படாமல் போஸ்டர்களைக் காட்டலாம். அண்மையில் ஜேர்மன் நாடாளுமனத்திலும் இப்படி நடந்ததே" என்றார் மங்கள சமரவீர எம்.பி.

"ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் 'வற்' வரிகள் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. உங்களுடைய நிலைப்பாடு என்ன?' என்று கேட்டபோது -

"நாடாளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட அநீதியை மக்கள் முன்கொண்டு செல்வோம். 'வற்' வரியைச் செலுத்த வேண்டாம் என மக்களைக் கோருவோம்" - என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார். (ஒ)

# ரத்வத்தையின் புதல்வர்களை தடுத்துவைக்க இடம் தேடுக!

## சிறை ஆணையாளருக்கு உத்தரவு

கொழும்பு,ஜூலை26

உடத்தலவின்ன முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை தொடர்பாக கொழும்பில் நடைபெறவுள்ள 'ட்ரயல் அட்பார்' விசாரணைகளுக்காக கண்டியிலிருந்து அழைத்துவரப்படவுள்ள முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் புத்திரர்களான லொஹான் ரத்வத்தை மற்றும் சானுக ரத்வத்தை ஆகியோரை கொழும்பில் பாதுகாப்பாகத் தடுத்து வைப்பதற்கு உரிய இடம் ஒன்றை ஒழுங்குசெய்து எதிர்வரும் 30ஆம் திகதி தனக்கு அறிவிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஹால் ஜெயசிங்க போகம்பரைச் சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

மேற்படி இருவரையும் பிணையில் விடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணைகளின் போதே நீதியரசர் மேற்படி உத்தரவை விடுத்தார்.

கண்டி உடத்தலவின்னவில் இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை சம்பந்தமாக இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தெல்தெனிய நீதிமன்றம் இவர்களுக்கு பிணை வழங்க மறுத்ததையடுத்து இவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த தவணையின் போது போகம்பரைச் சிறைச்சாலை ஆணையாளர் மற்றும் கண்டி சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோர் மனுதாரர்களைத் தடுத்து வைத்திருப்பதற்கான வாய்ப்பு, வசதிகள் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கைகள் சமர்ப்பித்திருந்தனர்.

இந்த அறிக்கைகள் மனுதாரர்களுக்குச் சாதகமாகத் தயாரிக்கப்பட்டிருக்கக் கூடும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டதால் அதன் உண்மைத்தன்மை குறித்து சிறைச்சாலை ஆணையாளர் மற்றும் பொலீஸ் அத்தியட்சகர் இருவரும் நீதிமன்றத்தில் சமுகமளித்து தெளிவுபடுத்த வேண்டுமென ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணையின்போது போகம்பரை சிறைச்சாலை ஆணையாளர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தார்.

விசாரணைகளின் பின் அவரது அறிக்கை தமக்குத் திருப்தியளிப்பதாக நீதியரசர் நிஹால் ஜெயசிங்க நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி டிலந்த வர்லியத்த வாதிடுகையில் மனுதாரர்களின் புதல்வர்களில் ஒருவருக்கு 6வயதென்றும் மற்றவருக்கு 4வயதென்றும் இவர்கள் இருவரும் தமது தந்தையைக் காணாமல் மனோரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

லொஹான் ரத்வத்த, சானுக ரத்வத்த ஆகியோர் குறித்த 'ட்ரயல் அட்பார்' விசாரணை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஆகவே, மனுதாரர்கள் இருவரும் கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டால் அவர்களுக்கு எத்தகைய பாதுகாப்பு வழங்கப்படும் என நீதியரசர் நிஹால் ஜெயசிங்க போகம்பரை சிறைச்சாலை ஆணையாளரிடம் கேட்டார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் தான் அவர்களைத் தங்கவைக்க வேண்டுமென ஆணையாளர் பதிலளித்தார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் நோயாளிகள் இருப்பதால், இவர்களுக்கு அந்த இடம் தகுந்த இடமாக இல்லையெனவும் பாதுகாப்பான இடமொன்றை ஏற்பாடு செய்து எதிர்வரும் 30ஆம் திகதி தமக்கு அறிவிக்கவேண்டுமெனவும் நீதியரசர் உத்தரவிட்டார்.

விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ)

துறவற வாழ்வின்

# 25ஆவது ஆண்டு நிறைவில் அருட்சகோதரி றொட்ரிகோ

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோ



தரி ஜெயசீலி றொட்றிகோ இன்று தனது துறவற அர்ப்பண வாழ்வின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றார்.

1952.02.01 அன்று சிலாபத்தில் பிரான்சிஸ் றொட்றிகோ தம்பதியினரின் மகளாகப் பிறந்த இவர், மன்னார் புனித சவேரியார் பெண்கள் வித்தியாலயத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

பின்னர் 1975ஆம் ஆண்டு துறவற வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்ட அருட்சகோதரி றொட்றிகோ, 1977.07.26 அன்று முதல் வாக்குதத்தம் செய்துகொண்டார். தொடர்ந்து வவுனியா, செட்டிக்குளம், பண்டத்தரிப்பு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் கல்விச் சேவையாற்றிய இவர், 1993 முதல் நெடுந்தீவு றோ.க.ம. கல்லூரியின் அதிபராகப் பதவியேற்று இன்று வரை தொடர்ந்து கடமையாற்றி வருகின்றார்.

யாழ்குடாநாட்டுக்கும் தீவுப் பகுதிகளுக்கும் இடையில் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் நெடுந்தீவில் அதிபராகப் பதவியேற்ற அருட்சகோதரி றொட்றிகோ ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அன்பர்கள், கல்வியாளர்களின் ஆதரவுடன் நெடு.றோ.க.ம. கல்லூரியில் பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுத்தார்.

தனது வாழ்வின் பெரும் பகுதியை நெடுந்தீவுப் பகுதி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக அர்ப்பணிக்கத் துணிந்த அருட்சகோதரி றொட்றிகோ, ஆசிரிய ஆளணியை அதிகரித்தல், காணி கொள்வனவு, பார்வையாளர் மண்டபம், அதிபர் அலுவலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், புனித லூர்து அன்னை தூபி, கணனி அறை, ஆரம்பக் கல்விச் செயற்பாட்டறை, சிறுவர் பூங்கா ஆகியவற்றை அமைத்ததுடன், பாண்ட் வாத்திய குழுவையும் முதன்முதலில் உருவாக்கினார்.

2000ஆம் ஆண்டு மேற்படி வித்தியாலயத்தைக் கல்லூரி தரத்துக்கு உயர்த்திய பெருமையும் இவருக்கே உண்டு. 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை ஆகியவற்றில் பல மாணவர்கள் சித்தியடையக் காரணமாக அமைந்த

### தயாளந்தி

அருட்சகோதரி றொட்றிக்கோ ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பை முதன் முதலாக கல்லூரியில் ஆரம்பித்ததோடு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவும் வழி சமைத்திருந்தார்.

இவ்வாறு மேற்படி கல்லூரியில் அருட்சகோதரி றொட்றிகோ பணியாற்றிய காலப்பகுதி பொன் எழுத்துக்களால் குறிக்கப்படவேண்டியதாகும்.

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் கல்விகற்று நாட்டின் எதிர்கால சிற்பிகளாகத் திகழப்போகும் மாணவியர்கள் அருட்சகோதரி றொட்றிகோவின் பணியை என்றும் நினைவு கூர்வர். ☆

# செய்திக் கொத்து

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

சண்டிலிப்பாய்,ஜூலை26

சண்டிலிப்பாய்(வலி.தென்மேற்கு) கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் அச்சுவேலி கோழிப் பண்ணையில் பிரான்ஸ் நாட்டு கோழி முட்டையிலிருந்து உற்பத்தி செய்யப் படும் கோழிக்குஞ்சுகள் இப்பகுதி யிலுள்ள பொதுமக்களுக்கு விரைவில் விநியோகம் செய்யப்படவுள்ளன. இவற்றை பெறவிரும்புபவர்கள் சண் டிலிப்பாய் - சங்கானை பிரதான வீதி யிலுள்ள சங்க அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள் ளும்படி கேட்கப்பட்டுள்ளது.(ஒ-135)

## கற்கைநெறி அங்குரார்ப்பணம்

ஏழாலை,ஜூலை26

பலாலி ஆசிரியர் கலாசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம் பக் கல்வி கற்கைநெறியின் அங் குரார்ப்பண வைபவம் யாழ்.முத்துத் தம்பி ஆரம்ப பாடசாலையின் கட்ட டத் தொகுதியில் கடந்த திங்கட்கிழமை கலாசாலை அதிபர் கு.சதாசிவ மூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கேகாலை மாவட்ட தெகியோவிட்ட வலயக் கல்விப் பணிப் பாளர் ஆர்.ஆபேசிங்க உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஒ-ரி)

## சட்டத்தரணிகள் விஜயம்

தென்மராட்சி,ஜூலை26

இலங்கை சட்டத்தரணிகள் சங் கத்தின் தலைவர் அஜந்த டபிள்யு. அத்துக்கோறளை மற்றும் சட்ட உதவி நிதியத்தின் தலைவர் எஸ்.எஸ். விஜயரட்னா தலைமையிலான சட் டத்தரணிகளும் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை வீதியில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றுக்கு வருகை தந்தனர். நிதியம் இங்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அவர்கள் ஆலோசனை நடத்தியதா கக் கூறப்படுகிறது. (ஒ-117)

## மிதிவெடி விழிப்புணர்வு

தென்மராட்சி,ஜூலை26

சர்வோதய இயக்கத்தின் யுனி செப் நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் மிதி வெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு களை கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்திவருகின்றனர்.

கருத்தரங்கில் கலந்துகொள்ளும் மக்களிடம் மிதிவெடி விழிப்புணர்வு பற்றிய வினாக்கொத்துக்கள் வழங் கப்படுகின்றன. (ஒ-117)

## கிளைக்கடை ஆரம்பம்

தென்மராட்சி,ஜூலை26

யுத்த அனர்த்தங்களால் தரை மட்டமாகிய சாவகச்சேரி பல நோக் குக் கூட்டுறவுச் சங்கக் கைதடி நுணா வில் கிளைக் கட்டடம் புனரமைக்கப் பட்டதையடுத்து அக்கட்டடத்தில் கிளைக் கடை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இடம்பெயர்வின் பின்னர் முதன் முதலாக கைதடி நுணாவில் கிளை தனியார் கட்டடமொன்றில் இயங்க ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## வெடிக்காத 'ஷெல்'கள்

தென்மராட்சி,ஜூலை26

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வரும் பகுதியில் வெடிக்காத நிலையில் ஷெல்கள் காணப்படுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகள், வளவுகள் துப்புரவு செய் யப்படும் வேளைகளில் வெடிக்காத நிலையில் ஷெல்கள் காணப்படுவ தாகவும் -

அவற்றினை மீட்குமாறு சம்பந் தப்பட்டவர்களுக்கு தெரிவித்த போதிலும் அவற்றினை அகற்று வதில் மெத்தனம் காட்டப்படுவ தாகவும் -

கூறப்படுகிறது. (ஒ-117)


**உடன் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள 500 தொடர் இலக்கம்கொண்ட JL-70 மோட்டார்சைக்கிளும், இரும்பு அலுமாரி, காஸ் சிலிண்டர் என்பன வும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
M.சுதாகர்,
35/8, குமாரசாமி வீதி,
கந்தர்மடம். (3384)



## தேவை

**'மதுரம்ஸ்' இசைக்குழு**

மேற்படி இசைக்குழுவுக்கு திறமைவாய்ந்த ஆண், பெண் பாடகர்களும் தபேலா, கிற்றார் கலைஞர்களும் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.

"ரவி வீடியோ சென்ரர்"
*கச்சேரி - நல்லூர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

இயக்குநர்,
கேசவராஜா தவனேஸ்,
*125, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

(6385)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியராக கடமைபுரியும்
திரு.இ.பாலசிங்கம் அவர்களின் தந்தையார்

### முருகேசு இராசையா

23-07-2002 காலமானதையிட்டு அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

யா/போதனா வைத்தியசாலை தாதியர்
நலன்புரிச் சங்கம்.

(6390)

## நினைவலைகள்



பிறப்பு 08 - 04 - 1948
இறப்பு 02 - 06 - 2002

### அமரர் கனகசபை நாகரட்ணம்

திதி: 26.07.2002

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த*
*உங்களை மறக்கமுடியவில்லையே - இன்று*
*தங்களை நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*268 (68), பிரவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

(6389)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 01 - 01 - 1915
மறைவு 26 - 06 - 2002

### திருமதி நல்லதம்பி வள்ளிப்பிள்ளை

அன்னையைப்போல் ஒரு தெய்வமுண்டோ?...

இன்று(26.07.2002) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள் கின்றோம்.

*"மணிபோசை",*
*நிலாவில்,*
*அல்வாய் வடமத்தி, அல்வாய்.*

*என்றும் உங்கள் நினைவோடு:*
**மகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்.**

(6391)


அச்செழு சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக
வளர்ச்சி நிதிக்கான

**மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி**

இடம்: நீர்வேலி சவாரித் திடல்
காலம்: 28.07.2002 ஞாயிறு பி.ப. 1.00 மணி

விசேட அம்சமாக வன்னியிலிருந்து வந்த 10 சோடி காளைகள கலந்து கொள்ளும் அட்டகாசமான போட்டி.
காணத் தவறாதீர்கள்!
அன்பளிப்பு: 10/-

*அச்செழு சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம்.*

(6387)



Kings LAGER
Kings EXTRA STRONG STOUT
Kings PILSNER
BISON XXXTRA STRONG LAGER

**கிங்ஸ் பியர் கீழ்க்காணும் சில்லறை விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

| | |
|---|---|
| கிங்ஸ் லாகர் | - ரூ. 60.00 |
| கிங்ஸ் ஸ்ரவுட் | - ரூ. 80.00 |
| பைசன் எக்ஸ்ரா ஸ்ரோங் | - ரூ. 95.00 |
| கிங்ஸ் பில்ஸ்னர் | - ரூ. 75.00 |

**கிங்ஸ் என்று கேட்டு வாங்குங்கள்**

உத்தரவு பெற்ற சகல மதுபான நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

(C/23054)

ஏக விநியோகத்தர்கள்

**வாமாஸ்**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel.2989


## மரண அறிவித்தல்

### கந்தையா சிவபாதசுந்தரம்

தென்புலோலியைப் பிறப்பிடமாகவும் தென்னாபிரிக்கா நகரமான பொத கஸ்வானாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாதசுந்தரம் (23.07.2002) செவ்வாய்க்கிழமை பொதகஸ்வானாவில் காலமானார்.

அன்னார் சிவமலரின் (முன்னாள் தாதி உத்தியோகத்தர், மந்திகை அரசினர் வைத்தியசாலை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - உமையாத்தையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஆசிரியர்) மற்றும் கோணாத்தைப்பிள்ளையின் மருமகனும் வேலுப்பிள்ளை, பார்வதி, வினாசித்தம்பி, சதாசிவம், சரஸ்வதி அம்மா, கமலாதேவி, மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பேராசிரியன் கணபதிப் பிள்ளை, கதிர்காமத்தம்பி, பொன்மலர், பூங்கோதை, மங்கையர்க்கரசி, சிவநேசன், சிவகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை பொதகஸ் வானாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.*

தகவல்:
சு.கோணாத்தைப்பிள்ளை
(சின்னம்மா - மாமி)

(6383)

## துயர்கலந்த எங்களது விழிநீர் அஞ்சலிகள்

9ஆம் ஆண்டு



தோற்றம் 06 - 01 - 1918
மறைவு 05 - 03 - 1993

### அமரர் சோமநாதபிள்ளை கந்தையா

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

*குடும்பத்தின் தலைவரானீர்*
*குவலயம் போற்றிட வாழ்ந்தீர்*
*கண்மணி போல் எமைக்காத்து*
*கல்வி தனையே புகட்டி*
*ஒப்பரிய மக்களாய் நாம்*
*ஓங்கு புவியில் வாழ*
*செப்புவித்த தந்தையே*
*சேவித்தே வணங்குகின்றோம்.*

12ஆம் ஆண்டு



தோற்றம் 24 - 07 - 1947
மறைவு 20 - 08 - 1990

### அமரர் கந்தையா ரவீந்திரன்

*(ஆசிரியர், யா/வைத்தீஸ்வரா கல்லூரி)*

*பாசத்தின் உறைவிடமானாய்*
*பரிந்துமே எம்மைக் காத்தாய்*
*நேசமாய் எமை அரவணைத்து*
*நெஞ்சுரம் தந்த அண்ணா (அப்பா)*
*பாதகர் செயலுக்கே நீயும்*
*பரிதவித்தே உயிர் கொடுத்தாய்*
*காலம்தான் மாறிடினும்*
*கனவிலும் மறவோம் அண்ணா (அப்பா)!*

2ஆம் ஆண்டு



தோற்றம் 07 - 07 - 1923
மறைவு 16 - 08 - 2000

### திருமதி காந்தாம்பாள் கந்தையா

திதி: அபரத்துதி 26.07.2002

*இல்லறத்தின் திருவிளக்காய்*
*இனிய நல்லறமாற்றி*
*பிள்ளைகள் ஏற்றம் காண*
*பெருமையாய் உழைத்த அன்னை*
*ஒப்புயர்வில்லா உழைப்பின்*
*உறுதியாய் உயர்ந்து நின்றாய்*
*இப்புவி இருக்கு மட்டும் உனை*
*எப்படி மறப்போம் அம்மா!*

*வேலணை - 01*

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

(6380)

இணுவில் - கோண்டாவில்
காரைக்கால் விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன் தேவஸ்தான

# பூங்காவன உற்சவம்

இன்று (26.07.2002) வெள்ளிக்கிழமை

காலை 10.00 மணி அபிஷேகம்
விசேட பூசை வழிபாடுகள்
மாலை 5.00 மணி திருக்கல்யாண வைபவம்.
இரவு 8.00 மணிக்கு செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் மேற்படி தேவஸ்தானத்தால் வழங்கப்பெற்ற 'செஞ்சொற் செல்வர்' பட்டத்தைப் பெற்றபின் சமய சொற்பொழிவுத்துறையில் பத்து ஆண்டுகளை பூர்த்தி செய்தமைக்கான பாராட்டு விழா.
*தலைவர்:* ஆலய மகோற்சவகுரு பிரம்மஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்
இரவு 9.00 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு "சிவனின் பெருமை" எனும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், அவர்கள்.
பின் கவியரங்கம்
தலைப்பு : "நெஞ்சம் மறக்குமா"
தலைமைக்கவி : மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
*இணுவில்.* (6394) - பூங்காவனத் திருவிழா உபயகாரர்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 - 10 - 1919



மறைவு 26 - 06 - 2002

## திருமதி அப்பாப்பிள்ளை பராசக்தி

இன்று (26.07.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், சபிண்டீகரணத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் சுற்றத்தார், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு வந்து எமது துயரில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளின்போது உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கல்வளவு,*
*12/4, அத்தியடி,*
*புது வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
அ.சிவகுமார் (மகன்),
சி.விஜயலட்சுமி (மருமகள்),
அ.கணேஸ்வரி (மகள்),
சி.ஜயராம் (பேரன்),
சி.கஜராம் (பேரன்),
சி.பிரதீப் (பேரன்).

(C/23053)

## பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை26

மகளிர் விவகார அமைச்சின் மகளிர் முன்னேற்றப் பெண் உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை இன்றும், நாளை சனிக்கிழமையும் காலை 9மணிமுதல் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை26

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையின் மாகாணப் பொது எழுதுநர், கணக்குப் பதியுநர் மற்றும் பண்டகசாலைக் காப்பாளர் சேவைகளின் வகுப்பு II பிரிவு 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இதற்கென 41 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வலிகாமம் கல்வி வலயத்தில் 10 நிலையங்களும், யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 31 நிலையங்களும் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன. (ஐ-10)

## திரைப்பட காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித்தொடரில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் கே.எஸ்.சேதுமாதவன் இயக்கிய 'நம்மவர்' திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது. (ஐ-10)

## மரண அறிவித்தல்

### ரவீந்திரன் வனோஜா

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த ரவீந்திரன் வனோஜா அவர்கள் நேற்று (25.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ரவீந்திரன் - ரஜீரா தம்பதியினரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2002) வெள்ளிக்கிழமை மாலை 3.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
P.அனுரா (மாமா)
டிலக்ஸ்
தொலைத்தொடர்பு நிலையம்,
சுன்னாகம்.
T.p. No- 021-3568, 3569

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.* (6403)

# ஒரு வரலாறு வாசிக்கப்படுகிறது

நெஞ்சு இழக்குமா
உங்கள் நினைவுகளை...
கடப்பாரை பட்டு அதிராத நெஞ்சம்...
இரும்பின் வலிமை!
காலையில் - அரசாங்க அதிகாரியாய்
மாலையில்
தோட்டத்தில் விவசாயியாய்
அன்றைய காலங்கள்
நிலாக்கால ஞாபகங்கள்...
உங்கள் முற்றுப் புள்ளிக்கால
வாழ்க்கையின் நினைவுகள்
நெஞ்சில் -
ஈரமாகப் படிகிறது!
தோட்டத்தில் நீங்கள் தூவிய விதைகள்
முளைவிட்டு. துளிர்த்து.
கொடியாய்ப் படர்ந்து
பூத்துக் குலுங்கிய வேளையில்
நீங்களோ -
மண்ணையும் கொடிகளையும் பிரிந்து
மௌனித்து விட்டீர்கள்!
ஆம். சின்னத்தானை
எம் மகனின் பப்பியாவை
பிரிந்தோம். இழந்தோம்!
உங்கள் வாழ்வு ஒரு வரலாறு - அது
இலக்கிய வார்த்தைகளால் வரையப்பட்ட
புனித வரலாறு! அதை
ஈரம் கசிந்த கண்களுடன்
வாசித்துக்கொண்டிருக்கிறோம்.



**வேலுப்பிள்ளை கனகரட்ணம்**
*(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)*
தோற்றம் 30.01.1943 மறைவு 18.07.2000

தீலீபன் மேகா, கோபு
கனடா.

(C/23057)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி இராஜபாக்கியம்

யாழ்ப்பாணம், கொட்டடி வைரவர் கோயிலடி வீதியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இராஜபாக்கியம் நேற்றுமுன்தினம் (24.07.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்தம்பியின் (ஓய்வுபெற்றவர், D.S. Office, யாழ்ப்பாணம்), இந்திராதேவி(ஆரையம்பதி, மட்டக்களப்பு), கமலாதேவி, உருத்திராதேவி, பிரபாகரன்(நீர் விநியோகப்பகுதி, யாழ். போதனா வைத்தியசாலை), கெங்காதேவி, றோகினிதேவி(சுவிஸ்), ரஞ்சினிதேவி(ஜேர்மனி), கிருபாகரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற டாக்டர் பாலசுந்தரம்(ஆரையம்பதி வைத்தியசாலை, மட்டக்களப்பு), சிவப்பிரகாசம்(அம்சன்,நெல்லியடி), கிருஷ்ணநாதன், சந்திரவதனா, கணேசலிங்கம்(சுவிஸ்), வசந்தி(ஜேர்மனி), சுப்ரமணியசிவா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராகவன்(ஆங்கில ஆசிரியர், நாரத வித்தியாலயம், கரவெட்டி), கார்த்திகா, மயூரன், செந்தூரன்(விஞ்ஞானப்பிரிவு மாணவன், சென்றல் கல்லூரி, மட்டக்களப்பு), கேசவன் (சென்றல் கல்லூரி, மட்டக்களப்பு), உசிதா(வடஇந்து மகளிர் கல்லூரி), நிரோசன்(ஹாட்லிக் கல்லூரி), நிருஷா(அரசினர் கலவன் பாடசாலை), துசிதன், வஜீரணி, வர்ஜணி(மாணிக்கவாசகர் வித்தியாலயம்), பிரகலாத் (ஹாட்லிக் கல்லூரி), துவாரகா(அரசினர் கலவன் பாடசாலை), ரம்மியா, நிவேதா(சுவிஸ்), அபிராம்(சுவிஸ்), நிலானி(சுவிஸ்), பைரவி(ஜேர்மனி), கீத்சனி(ஜேர்மனி), ஸ்ரீதி(ஜேர்மனி), ரமணன்(ஜேர்மனி), சுமணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*021-63212 கரன் கொமினிக்கேசன்,*
*அல்வாய்.*

தகவல்:
(C/23056) கிருபாகரன் (மகன், ஜேர்மனி)


# பரதநாட்டிய அரங்கேற்றம்

நாட்டிய கலைமணி
செல்வி அகல்யா சுந்தரம்
அவர்களின் மாணவிகள்
செல்விகள்

**ஆன் துஷ்யந்தி பாக்கியநாதன்**
**ஸ்ரெலா கிறிஷாந்தி பாக்கியநாதன்**

ஆகியோரின்
பரதநாட்டிய அரங்கேற்றம்

*பிரதம விருந்தினர்:* 'மகா வித்துவான்' யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்
*சிறப்பு விருந்தினர்:* அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ்
அதிபர், யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
இடம் - வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் - 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.35 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*88A, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

திரு. திருமதி
பாக்கியநாதன்.

(6398)




## தவறிவிட்டது

பாலசுப்பிரமணியம் துர்க்கா
*(35, கனகசபைவீதி, வண்ணார்பண்ணை)*
என்பவரின் தேசிய அ.அட்டை (807472518V) நேற்றுமுன்தினம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கும் சிவில் அலுவலகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் மேற்படி முகவரியில் அல்லது நல்லூர் N.E.I. கல்வி நிறுவனத்தில் ஒப்படைத்து உதவவும். (6404)


**நாகம்ஸ்** சுன்னாகம்
குணால், தருண், சினேகா,
பிரிதா, தாமு
நடித்த
**புன்னகை தேசம்**
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)

**நிறஞ்சனாஸ்**
சங்கானை
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த
**நந்தா**
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C/22944)

**ராஜா** யாழ்ப்பாணம்.
31-ஆம் திகதிவரை
அஜித், ஜோதிகா, வடிவேல் நடித்த
**ராஜா**
தினசரி 10.30, 2.30, 5.30

# யுத்தநிறுத்தத்தின் முன்னேற்றம் குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானிப்பு

வாஷிங்ரன்,ஜூலை26

இலங்கையின் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் முன்னேற்றம் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களததின் பிரதியமைச்சரான ரிச்சர்ட் ஆமிடேஜ் தெரிவித்திருக்கிறார்.

எதிர்காலத்திலம் அந்த உடன்படிக்கை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படுமேயானால் இலங்கையின் நிலைமையை நேரில் அறிந்துகொள்ள விரைவில் இலங்கைக்கு வர எண்ணியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கைப் பிரதமரின் விஜயத்தின்போதே அவர் இவற்றைத் தெரிவித்தார். (ஐ)

## வைகோவுக்கு ஆதரவாக சுவிஸில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை26

ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவை விடுவிக்கக் கோரி சுவிஸ் வாழ் ஈழத்தமிழர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை சுவிஸின் பேர்ண் நாடாளுமன்றுக்கு முன்பாக ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

இந்த ஒன்றுகூடலை சுவிஸ் தமிழர் அமைப்புகளின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. (ஐ)

## சந்திப்பு ஒத்திவைப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் நாளை இடம்பெறவிருந்த பேச்சுகள் பிற்போடப்பட்டுள்ளன. (ஐ-3)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவதற்கான விசாரணைகளை இராணுவம் நடத்தி வருவதாகவும் கூறப்பட்டது.

தனிப்பட்ட சிப்பாய் ஒருவரின் அத்துமீறிய செயற்பாட்டின் விளைவே இந்த மோதல் என்பதை இரு தரப்புகளும் நன்கு புரிந்து ஏற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே இந்தச் சம்பவத்தால் தறபோதைய யுத்தநிறுத்த அமைதி நிலைக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் இராணுவ உயர் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இலங்கையில் கடந்த டிசெம்பரில் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் கடந்த ஏழு மாத காலத்தில் தரையில் இடம்பெற்ற மோதலில் படைத் தரப்பில் அல்லது புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்த முதல் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.


சொகுசு பயணத்திற்கு!

கிலோ மீற்றருக்கு 18 ரூபா மட்டுமே!

அழையுங்கள் 2742

அம்பாள் ரவல்ஸ்

கும்பஸ் லேன்

(மக்கள் வங்கி அருகில்),

திருநெல்வேலி. (6399)



வீடு விற்பனைக்கு

1 1/2 பரப்புக் காணியில் புலவர் வீதி, நவாலி வடக்கில் அமைந்திருக்கும் புதிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

விவரங்களுக்கு:

ஜோ.எகூட்டன்

10/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (6377)


# காணவில்லை



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் 68/4, யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

**திருமதி சிவமணி சுப்பிரமணியம்**

வயது 68, பொதுநிறம், 5அடி உயரம். நேற்றுமுன்தினம் 24.07.2002 புதன்கிழமை மாலைமுதல் காணவில்லை. இவர் புத்திசுவாதீனம் குறைந்தவர். சரளமாகப் பேசமாட்டார். கடைசியாக இவர் மண்ணிற சேலை அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து தொ.பே.இல. 1521, 2216 ஆகிய இலக்கங்களுக்கு அல்லது மேற்படி தற்காலிக முகவரிக்குத் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். (6401)

## கொழும்பில் ஜே.வி.பி. அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை26

எதிர்வரும் 31ஆம் திகதி கொழும்பில் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஜே.வி.பி. நடத்தவிருக்கிறது.

வாழ்க்கைச்செலவு உயர்வு, தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமை ஆகியவற்றை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கிறார்.

தேசிய பிக்கு முன்னணி, தாயகம் காக்கும் மாணவர் அமைப்பு, அகில இலங்கைத் தொழிற்சங்கச் சம்மேளனம் உட்படப் பல அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொள்ள முன்வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ-9)

## உண்ணாவிரத..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது மட்டக்களப்புச் சிறைச்சாலையில் 47 ஆண் கைதிகளும், 4 பெண் கைதிகளும், தண்டனை வழங்கப்பட்ட 3 கைதிகளும் இருந்து வருகின்றனர். (ஐ-3)

## தென்மராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை அமைத்து வருகின்றனர். கல்விக்கு கட்டடங்கள் மட்டும் போதாது கற்பதற்கும், கற்பிப்பதற்கும் புறச்சூழல்களும் சாதகமாக அமைய வேண்டியது அவசியமாகும். இராணுவ முகாம் களுக்கும் காவலரண்களுக்கும் மத்தியிலிருந்து கொண்டு கற்க முடியுமா? கற்பிக்கத்தான் முடியுமா? பாடசாலைக் கட்டடங்களிலிருந்து வெளியேறினால் நாங்கள் எங்கே செல்வது என்று இராணுவம் கேட்பது வேடிக்கையானது. இந்த வினாவை அரசாங்கத்திடம் கேட்கட்டும்.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பாடசாலைக் கட்டடங்களிலிருந்து இராணுவத்தினை வெளியேற்றி இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்ற விடயத்தில் அரசாங்கம் காட்டும் அலட்சியம் எம் மத்தியில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சிறிய விடயத்தைக் கூட நிறைவேற்றாமல் இழுத்தடிக்கின்ற இராணுவம், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப்போகின்றதென்பதே எமது சந்தேகமாகும் - என்றுள்ளது.


அறிவொளி NALLUR

A/L - 02 CHEMISTRY

திரு. டயஸ்

சேதன இரசாயன வினா-விடை மீட்டல்

ஆரம்பம் : 26.07. 2002 Fri. 4.30 p.m.

வகுப்புகள் : Sat., Sun. 2.30 p.m. (6378)

LOGIC

A/L 2003

பகுதி II விஞ்ஞானமுறை

ஆரம்பம் : 27.07.2002

சனி - 12 p.m.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.

By. P.கமல்

மதுபாரத் - குமாரசாமி வீதி. (6402)


## தனித் தமிழ் ஈழம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்த சமாதான ஒப்பந்தம் செய்துள்ளது. இது பெரும்பான்மை சிங்கள மக்களுக்கே பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலை புலிகள் தனி ஈழத்திற்கான வியூகம் அமைத்துக் கொண்டுள்ளனர். தமது படைக்கு ஆள திரட்டுகின்றனர். விற்பனை வரி, ஆயுத வரி என வரிகள் அறவிடுகின்றனர். தமக்கென தமிழீழக் காவல்துறை என ஒரு தனியான பொலீஸ் அமைப்பை உருவாக்கி உள்ளனர்.

தனியான தமிழீழ வங்கிகளைக் கூட ஆரம்பித்துள்ளனர். இவை எல்லாம தனியான ஓர் ஈழ இராச்சியத்தை உருவாக்கும் அத்திவாரம்தான். ஆனால், அரசோ இவற்றையெல்லாம் கண்டும் காணாமல் இருக்கின்றது. இது ஏன்? இன்றைய அரசு நாட்டை புலிகள் இரண்டாகப் பிரிப்பதற்குத் துணை போகின்றதா?

தமிழழப் பொலீஸ் படைக்கு ஆள் திரட்டுவது தொடர்பாகவும், தமிழீழ வங்கி அறிவித்தல் தொடர்பாகவும் இலங்கை அரசினால் பதிவு செய்யப்பட்ட 'உதயன்', 'சுடரொளி' ஆகிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் விளம்பரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒரு தேசிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. இவற்றை அரசாங்கம் அறியவில்லையா?

இலங்கை ஒரேநாடு, இங்கு ஒரே இராணுவம், ஒரே பொலீஸ், ஒரே நாடாளுமன்றம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமக்குச் சாதகமாக்கி கொண்டு பாதுகாப்புப் படைகளை செயல் இழக்கச் செய்துள்ளனர். அதே வேளை புலிகள் தனித் தமிழீழம் ஒன்றை அமைக்கும் வகையிலும் செயற்படுகின்றனர்.

இதுநாட்டின் இறைமைக்கும், ஒற்றை ஆட்சிக்கும் பெரும் அச்சுறுதலாகவே அமைந்துள்ளது - என்று ஜே.வி.பி.உறுப்பினர் தனது உரையின் போது குறிப்பிட்டார். (ஐ)


M.A., M.Com. [பட்டப்பின் படிப்பு]

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

மேற்குறித்த பட்டப்பின்படிப்பினை மேற்கொள்வதற்கான பதிவுகள் செய்து கொள்வதற்குரிய

விண்ணப்ப முடிவு திகதி - ஓகஸ்ட் 15

விரிவுரைகள் ஆரம்பம் - 31-08-2002

பல்கலைக்கழகப் பதிவுகள், விரிவுரைகள், பரீட்சைகள் முதலான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு: S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

(6348) ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை தேவராசா

**(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)**

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு, மடத்தடியை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை தேவராசா அவர்கள் நேற்று (25.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் அரசம்மாவின் பாசமிகு கணவரும் தேவமாலா (கொலண்ட்), தேவசீலன், தேவஅகிலன் (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் இரத்தினபூபதியின் சகோதரனும் கேமச்சந்திரனின் மாமனாரும் கேமராஜ், கெபின்ராஜ், லகுனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மீசாலை கொற்றுலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாவகச்சேரி வடக்கு,*
*மடத்தடி.*

தகவல்:
தே.தேவசீலன் (மகன்) (6408)

## ஏபிரகாம் சொலமன் தர்மரட்ணம்

மல்லாகம் புதுமைமாதா ஆலயத்தைச் சேர்ந்த ஏபிரகாம் தர்மரட்ணம் நேற்று (25.07.2002) வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏபிரகாம் (சின்னத்துரை)-எலிசபேத் தம்பதியினரின் அன்பு மகனும் சுகிதமலரின் அன்புக் கணவரும் மாணிக்கம் - கனகம்மா தம்பதியினரின் மருமகனும் ஜேம்ஸ், ஜெனாத்தன், ஜெனிஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் விட்டோறியா, காலஞ்சென்ற மாக்கிரட் நவரெட்ணம், ஜெயரெட்ணம், சௌந்தரி, செல்வரெட்ணம், காலஞ்சென்ற வேஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் விக்ரர் தர்மலிங்கம், பத்மநாதன், சுசீலா, அரியமலர், வனஜா, தவரெட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அவரின் நல்லடக்கம் இன்று (26.07.2002) வெள்ளிக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி மல்லாகம் புதுமைமாதா ஆலயத்தில் இன்று (26.07.2002) வெள்ளிக்கிழமை மாலை 3.00மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவாலய வீதி,*
*மல்லாகம்.*

தகவல்:
எலிசபேத் (தாயார்),
செல்வரெட்ணம் (சகோதரர்).
ரோமி கொமினிக்கேசன் T.P. 2880 (6406)

## முருகேசு இராசரத்தினம்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.07.2002) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கற்பகம் தம்பதியினரின் அன்பு மகனும் அழகம்மாவின் அன்புக் கணவரும் தேவரஞ்சினி, காலஞ்சென்ற பிரேம்குமார் மற்றும் ஜெயக்குமார், உதயரஞ்சினி, மதனரஞ்சினி (ஜேர்மனி), பிரேமரஞ்சினி, தேவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.07.2002) வியாழக்கிழமை பி.ப.4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

தகவல்:
திருமதி இராசரத்தினம்அழகம்மா (மனைவி) (6407)


யாழ்ப்பாணத்தில்

எக்கின் ஸ்பென்ஸ் ஒவசீஸ் ரவல் சேவிசஸ் பிறைவேட் லிமிட்டெட்

IATA

(நம்பிக்கையான பிரயாண முகவர் நிறுவனம்)

உங்களுக்காக எங்களிடம்

- உலகளாவிய விமானப் பிரயாண ரிக்கெற் வசதிகள்
- விசா பற்றிய ஆலோசனை வசதிகள்
- ஐரோப்பிய நாடுகளுக்கான ரயில் வசதிகள்
- இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் திருத்தலங்களுக்கு, உல்லாச இடங்களுக்கு, குழுக்களாகச் செல்ல வசதிகள்
- இந்தியத் திருத்தல யாத்திரிகர்களுக்கு சைவ உணவு, நேர்த்திக்கடன் வசதிகள்
- விமானப் பிரயாண ரிக்கெற்றை மீள உறுதிசெய்தல் (Re-Confirmation) மற்றும் பயணத்துக்கான திகதியை மாற்றுதல் (Date Change)
- வெளிநாட்டவர், உள்நாட்டவர் அனைவருக்கும் இலங்கையின் சகல இடங்களிலும் பிரயாண, விடுதி வசதிகள்.

உங்கள் தேவைகளே எங்கள் சேவை. இதற்காக நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

இல. 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 3771

தலைமைக்காரியாலயம்: இல. 305, வொக்ஸ்கோல் வீதி, கொழும்பு - 02. தொலைபேசி - 074-717711

(C/23027)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.